Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 மார்கழி-29 13-01-2005 வியாழக்கிழமை ஓசை -33



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11118)



தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களும் முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இயற்கை அனர்த்தம் காரணமாகச் சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் எழிலரசனும்.



தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களும் முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இயற்கை அனர்த்தம் காரணமாக சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் தர்மேந்திரனும்.

# இயற்கை அனர்த்தத்திற்காய் இங்கிருந்து புலம்பெயர வேண்டிய தேவை இல்லை!

## பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவதே முதற்பணி — சு.ப.தமிழ்ச்செல்வன்

**போர் நெருக்கடி காரணமாக இங்கிருந்து பல இலட்சம் மக்கள் புலம் பெயர்ந்தது போல் தற்பொழுதும் இங்கிருந்து புலம் பெயர வேண்டியதேவையில்லை. இயற்கை அழிவில் இருந்து மீண்ட மக்களை உதவிகள் புரிந்து அரவணைக்க வேண்டிய தேவை உள்ளது. அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவது தான் முதற் பணியாக இருக்கின்றது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் அமெரிக்க சஞ்சிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் இராணுவக் கெடுபிடிகளுக்குள்ளும் இருக்கின்ற மக்களுக்கு வெளி நாடுகளில் தஞ்சம் கொடுப்பது அவசியம்தான். அதை நாங்கள் புறக்கணிக்கவில்லை. அவர்கள் புலம்பெயர்ந்து தஞ்சம் கோரி வாழ்வது தவிர்க்க முடியாதது. ஆனால், இன்றைய சூழலில் எங்களுடைய பாதுகாப்பான பிரதேசங்களுக்குள் பாதிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் நலன்புரிநிலையத்தைப் பராமரிக்கும் போராளியுடன் பொலிசார் வீண் தர்க்கம்

(வடமராட்சி)

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்திப் பகுதியில் உந்துருளியில் வந்து கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் போராளி ஒருவரைப் சிறிலங்காப் பொலிசார் மறித்து சாரதி அனுமதிப்பத்திரம் கேட்டு சர்ச்சையில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் உந்துருளியில் வந்த விடுதலைப்புலிகளின் போராளி ஒருவரை பொலிசார் வழி மறித்த போது தான் அரசியல்துறை போராளி என்று உறுதிப்படுத்தியும் அவ் உறுப்பினரை மேற்கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இல.ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி இயக்குநர் பதவி நீக்கம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி இயக்குநர் ராஜ கதுகம்பொல நீக்கப்பட்டு அவ ரின் கடமைக்கு சோமபால பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார் என ஊடகத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கடந்த சனிக்கிழமை காலை வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியை மேற்கோள் காட்டி சுனாமி கடற் கொந்தளிப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும், அவ்வமைப்பின் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டுஅம்மானும் இறந்திருக்கலாம் அல்லது காணாமற் போயிருக்கலாம் என்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

### -அம்பாறை மாவட்ட நலன்புரி நிலையங்களை விட்டு-

## த.பு.கழக தொண்டர்களை வெளியேற சிறிலங்கா அதிரடிப்படை உத்தரவு

அம்பாறை மாவட்டத்தில் நலன் புரி நிலையங்களை விட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் உடனடியாக வெளியேற வேண்டுமெனவும், தமது செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் ஆயுத முனையில் எச்சரித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பெரிய நலாவணை விஷ்னு வித்தியாலயத்திற்கு வந்த படையினர் அங்குள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் களஞ்சியத்தைப் பூட்டித்திறப்பைக் கொண்டு சென்றதுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்களை அங்கிருந்து விரட்டியடித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### நாட்காட்டி இணைப்பு



தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உருவப்படம் தாங்கிய ஈழநாதம் வர்ண நாட்காட்டி இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## யாழ்.இல் "சுனாமி"யால் பாதிக்கப்பட்ட இடங்களை கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்

சுனாமி கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட மக்களினை சந்திப்பதற்குமென கனேடியப் பாராளுமன்ற உறுப்பினரான ஜிம்ஹரிக்கியானிஸ் நேற்று யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்துள்ளார். ரொறன்ரோ ஸ்காபறோ மாநிலத்தைச் சேர்ந்த இவர் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வரும் ஈழத்தமிழ் மக்களின் அழைப்பின் பேரிலேயே அவர் வருகை தந்திருந்தார். அவருடன் கனடா வாழ் தமிழ்ப்பிரமுகர்கள் நால்வரும் குடாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

முன்னதாக விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்திற்குச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட வீட்டின் தளபாடங்கள் மூலம் இராணுவக் காவலரண்கள் அமைப்பு

### கனடா பா.உ.விற்கு காட்டப்பட்டது

சுனாமிக் கடலலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட வீடொன்றின் தளபாடங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இராணுவக் காவலரண் ஒன்றை குடும்பஸ்தர் ஒருவர் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம கரிக்கியானிசுக்கு காட்டிய சம்பவம் நேற்று வடமராட்சியில் இடம்பெற்றது.

யாழ். வடமராட்சி பகுதிக்கு நேற்றுச் சென்ற கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் அகதிகளிடம் அரசிடமிருந்து ஏதாவது உதவிகள் கிடைத்தனவா என்று கேட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

-நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால்-

# கிளி.வைத்தியசாலைக்கு பொருட்கள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

நல வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் நன்மை கருதி தொலைக்காட்சிப் பெட்டியினையும் மற்றும் வைத்தியசாலை மருந்தகத்திற்கென குளிர் சாதனப் பெட்டியினையும் நேற்று கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு கிளிமாவட்ட வைத்தியசாலை பெண்நோயாளர் விடுதிக்கென நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர்: திலகர் தொலைக்காட்சிப் பெட்டியினை பெண்கள் நோயாளர் விடுதிதாதியர் ம.கிருஸ்ணபவானியிடம் கையளித்ததுடன் குளிர்சாதனப் பெட்டியினை மருந்தக களஞ்சியப் பொறுப்பாளரிடமும் கையளித்தார்.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மேற்படி பொருட்கள் நல வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் கிளிமாவட்ட வைத்தியசாலைக்கென அன்பளிப்பாக வழங்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## வரிவிளம்பரம்

**சிங்கள மொழிவகுப்பு புதிய பிரிவு ஆரம்பம்**

15. 01.2005

வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் 4-5.30 மணிவரை நடைபெறும் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். விபரங்களுக்கு:-பி.எஸ்.ரி. தொழில்நுட்பம் கச்சேரி அருகாமை கிளிநொச்சி. (5551)

# காணவில்லை

சோமசுந்தரம் பாஸ்கரன் வயது 38 அவரது மனைவி நிர்மலா வயது 32 தெகிவளை கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் விடுமுறைக்காக கள்ளப்பாடு. முல்லைத்தீவுக்கு வந்தவர்கள் கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின்போது காணாமல் போய்விட்டார்கள். இவர்களை இவர்களது மகன் மதன் ராஜ் வயது 12 தேடுகிறார். தகவல் தெரிந்தவர்கள் க.செ.பஞ்சரத்தினம் நில அளவையாளர் உடையார்கட்டு என்பவருடன் தொடர்பு கொள்ளவும்.

(5093) தகவல் மகன் மதன்ராஜ்

# சாவு அறிவித்தல்

## பெரியதம்பி நாகேந்திரம்

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், சிவன்வீதி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி நாகேந்திரம் அவர்கள் 12.01.2005 அன்று சாவடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற பொலிஸ் பெரியதம்பி ராமாசிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மா, சண்முகம் (ஓய்வு பெற்ற பொலிஸ்), பராசக்தி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பையா, செல்லம்மா, வரப்பிரகாசம் (ஓவசியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிவன் வீதி, உருத்திரபுரத்திலுள்ள வரப்பிரகாசம் (ஓவசியர்) என்பவரது இல்லத்தில் நடைபெற்று 13.01.2005 இன்று மாலை 2.00 மணியளவில் உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
வரப்பிரகாசம் [ஓவசியர்],
சிவன் வீதி,
உருத்திரபுரம்.

(5552)

# யாழ். பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

(i) கலைப்பீட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்

(ii) இராமநாதன் நுண்கலைக்கழக (இசை, நடனம் ,சித்திரமும் வடிவமைப்பும்) நான்காம் வருட முதலாம் அரையாண்டு விசேட பரீட்சைகள்

19.01.2005 தொடக்கம் தொடர்ந்து நடைபெறவிருந்த மேற்படி பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 25.01.2005 இற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

17.01.2005 தொடக்கம் நடைபெறவிருந்த இராமநாதன் நுண்கலைக்கழக (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 08.02.2005 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட விளம்பரப்பலகையிலும், இராமநாதன் நுண்கலைப்பீட விளம்பரப்பலகையிலும் திருத்தியமைக்கப்பட்ட பரீட்சை அட்டவணைகளைப் பார்வையிடலாம்.

(சி-11072) துணைவேந்தர்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை

## பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு- 2004/2005

2004 க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்து 2004/2005 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாயம்/விஞ்ஞானம்/ முகாமைத்துவம் / வர்த்தகம் /கலை / சித்தமருத்துவம் /சட்டம் ஆகிய கற்கைநெறியைப் பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நேரில் வந்து தங்கள் பதிவை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(தொலைபேசி - 021 2226714)

| கற்கைநெறி | பதிவு செய்யும் திகதி | நேரம் | விரிவுரைகள் ஆரம்பம் |
|---|---|---|---|
| 1. விவசாயம் | 25.01.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 07.02.2005 |
| 2. விஞ்ஞானம்[பௌதீகம்] | 26.01.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 18.04.2005 |
| 3. விஞ்ஞானம் [உயிரியல்] | 26.01.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 18.04.2005 |
| 4. வர்த்தகம் | 27.01.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 14.02.2005 |
| 5. முகாமைத்தும் | 27.01.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 14.02.2005 |
| 6. கலை | 01.02.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 14.02.2005 |
| | 02.02.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | |
| | 03.02.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | |
| 7. சித்தமருத்துவம் | 07.02.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | 21.03.2005 |
| 8. சட்டம் | 10.02.2005 | 09.00-12.00 - 01.30-03.00 | பின்னர் அறிவிக்கப்படும் |

பதிவு செய்யப்படாதோரின் பெயர்ப்பட்டியல் 15.02.2005 இற்கு முன்னதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்ப வேண்டியுள்ளதால் தங்களது பதிவினை மேற்படி திகதிகளில் தவறாது மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். 10.02.2005 இற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் பதிவுகள் நடைபெறமாட்டாது.

### சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. பிறப்புச் சான்றிதழ் [மூலப்பிரதியும்,போட்டோ பிரதியும்]
2. பாடசாலை விடுகைப்பத்திரம் [மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்]
3. நிழற்படப்பிரதி [அளவு 2'X 21/2'] கறுப்பு வெள்ளை 08 பிரதிகள்
4. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
5. தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி
6. க.பொ.த.[உயர்தரம்] பெறுபேறும் அதன் "Z" ஸ்கோர் விபரமும் [மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்]

### செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | ரூபா 150/= |
| ஆய்வுகூட கட்டணம் | ரூபா 300/= [விஞ்ஞானம்/ விவசாயம்/ சித்தமருத்துவம், புவியியல்] |
| வைத்தியக் கட்டணம் | ரூபா 100/= |
| கைநூல் | ரூபா 65/= |
| மாணவர் வழிகாட்டி நூல் | ரூபா 10/= |

தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியல் அந்தந்த பீட விளம்பரப்பலகையிலும், நலச்சேவை கிளை விளம்பரப் பலகையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர்
12.01.2005

(சி-11073)


# வன்னியன் தொலைத்தொடர்பு நிலையத்தின் வாடிக்கையாளருக்கு தைத்திருநாள் நற்செய்தி

☎ அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கான அழைப்பிற்கு நிமிடம் ஒன்றிற்கு ரூபா 10/- மட்டுமே

☎ இணைய சேவையையும் பெற்றுக்கொள்ளலாம். பார்வையிடும் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 100/- மட்டுமே



வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்- யாழ்சாலை கிளிநொச்சி,
[அரச அதிபர் இல்லம் முன்பாக]

வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்- யாழ்சாலை கிளிநொச்சி,
[வைத்தியசாலை முன்பாக]

வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம் - ஒட்டுசுட்டான்

Web Browsing
1 hour -100/-

E-mail; Vannian Communi Cation @ yahoo.com
tel - 021 228 5885
Fax - 021 228 5978

(சி.11174)

# பாக்.முன்னாள் பிரதமர்கள் நவாஸ் ஷெரிப், பெனாசீர் பூட்டோ நாடு திரும்ப அனுமதி வழங்கப்போவதில்லை!

–பாக்•சனாதிபதி பர்வேஷ் முஷாரப்

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்கள் நவாஸ்ஷெரிப், பெனாசீர் பூட்டோ ஆகியோர் நாடுதிரும்ப அனுமதிக்கப்படமாட்டார்கள் என பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ்முஷாரப் தெரிவித்துள்ளார்.**

முஷாரப் இராணுவத் தளபதியாகவும், சனாதிபதியாகவும் நீடிப்பதற்கு பாராளுமன்றத்தின் உத்தரவைப் பெறுவதற்காக எதிர்க் கட்சிகளுடன் சமரசம் செய்து கொண்டுள்ளார். இதனால் முஸ்லிம் லீக் கட்சித் தலைவரும்,முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப்பும், பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவர் பெனாசீரும் வெளிநாடுகளிலிருந்து பாகிஸ்தான் திரும்புவார்கள் என்று செய்திகள் வெளியாகின. இதை முஷாரப் மறுத்து இருக்கிறார்.

இது தொடர்பாக ஒரு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் முஷாரப் கூறியதாவது:- முன்னாள் பிரதமர்களான பெனாசீரும்,நவாஸ் ஷெரீப்பும் வெளிநாடுகளில்தான் தங்கியிருப்பார்கள். அவர்கள் நாடு திரும்ப அனுமதிக்கப் படமாட்டார்கள். நான் சமீபத்தில் நவாஸ் ஷெரீப்புடன் தொலைபேசியில் பேசினேன். அவர்கள் தந்தையின் மரணம் குறித்து துக்கம் விசாரித்தேன்.

ஷெரீப் அவராக விரும்பித்தான் வெளிநாடு சென்றார். யாரும்அவரைக் கட்டாயப் படுத்தவில்லை. ஷெரீப்,ஜெட்டா சென்று அடைந்ததும்எடுக்கப்பட்ட வீடியோ படக்காட்சியைப் பார்த்தால் அவர் எவ்வளவு சந்தோஷமாக அப்போது இருந்தார் என்பது தெரியும்.

பெனாசீர்தான் பதவி ஏற்பதற்கு முன்பே அவராகத்தான் வெளிநாடு சென்றார். இவ்வாறு முஷாரப் கூறினார்.



ஈராக்கின் தெற்கு நகரான பஸ்ராவில் கார்க்குண்டுத் தாக்குதலில் சேதமாக்கப்பட்ட பொலிஸ்வாகனத்திற்கு அண்மையாக ஒரு ஈராக்கியப் பாதுகாப்புப் படைவீரர் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளார்.

# ஈராக் பொலிஸ் நிலையத்தில் கார்க் குண்டு வெடிப்பு!

- 7 பொலிசார் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் பொலிஸ் நிலையமொன்றில் நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 7 பொலிசார் உயிரிழந்துள்ளனர். மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் வடபாக்தாத்தின் திக்றிக் பகுதியிலுள்ள காவல் நிலையமொன்றின் மீது தற்கொலைப் படைதாரிகள் வெடிகுண்டு நிரம்பிய காரை வெடிக்கச்செய்தனர். இதன்போது மேலும் 8பேர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் பாக்தாத் நகரிலுள்ள தேர்தல் ஆணைய கட்டடம் மீதும் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியுள் [illegible]ர். இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலைக் குழப்புவதற் [illegible]க இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# மாவோ கிளர்ச்சியாளர் எதிர்த்தாலும் நோபாளத்தில் தேர்தல் நடைபெறலாம்

(காத்மண்டு)

நேபாளப் பிரதமமந்திரி நாட்டில் தேர்தல் நடத்தவிருப்பது பற்றி இந்த வாரம் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



ரஷ்யாவின் அவசர மீட்பு, நிவாரணக் குழுவினர் இந்தோனேசியாவின் பண்டாஅசே மாநிலத்தை வந்தடைந்தவுடன் தமது பாரமான கருவியைக் காவிவருகின்றன.

மாவோ கிளர்ச்சிவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதிலும் இந்த ஆண்டில் தேர்தல் நடத்துவதற்கு நேபாளப் பிரதம மந்திரி உறுதியாகவுள்ளார்.

சேர்பகதூர் கியுபா 2 ஆண்டுகளுக்கு மேலாக தாமதமாகியுள்ள பொதுத் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றார். பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வருமாறு பிரதமமந்திரி விடுத்த கோரிக்கையை கிளர்ச்சி வாதிகள் நிராகரித்ததையடுத்து தேர்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் தேர்தலை சுதந்திரமாகவும், கண்ணியமாகவும் நடத்த முடியுமா என்பது கேள்விக் குறியாகவுள்ளதென்று பத்திரிகையொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

# கலிபோர்னியாவில் நிலச்சரிவு 3 பேர் பலி; 12 பேரைக் காணவி[illegible]லை

கலிபோர்னியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் மூன்று பேர் பலியாகியுள்ளனர். 12 பேரைக் காணவில்லை.

அமெரிக்கா, கலிபோர்னியா மாகாணத்தில் பலத்த மழை பெய்கிறது. பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.இதனால்,லாகோன்சிட்டா என்ற இடத்தில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. பல வாகனங்கள் அதில் சிக்கின. அருகில் உள்ள வீடுகளின் மீதும் மண் சரிந்து விழுந்தது. இதில் சிக்கி மூன்று பேர் பலியாகினர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.


நிலச்சரிவில் மேலும் 12 பேர் சிக்கியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. அவர்களில் 4 பெண்கள் அட்ங்குவர். மீட்புப் பணி வேகமாக நடக்கிறது. நிலச்சரிவில் சிக்கியவர்கள் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது.

# தூக்கம் குறைந்தால் உடற்பருமன்! விஞ்ஞானி பிரைட்டியூரெக் எச்சரிக்கை!

குறைவான நேரம் தூங்குபவர்களின் உடல் பெருக்கும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

"உடலைக் குறைக்க நினைப்பவர்கள் எல்லாம் உணவுக் கட்டுப்பாட்டிலும், உடற்பயிற்சியிலும்அதிக கவனம் செலுத்துகிறார்களே தவிர, நன்றாகத் தூங்கவேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர்" என்று வடவெஸ்டர்ன் பல்கலைக்கழக விஞ்ஞானி பிரைட்டியூரெக் கூறினார்.

நார்போல்க் நகரில் உள்ள கிழக்கு வர்ஜீனியா மருத்துவக் கல்வி நிலையம் ஆயிரம் பேரிடம் நடத்திய ஆய்வின் மூலம் தூங்கும் நேரம் குறைவதால் உடல் எடை கூடுகிறது என்பது தெரிய வந்தது. பெண்களை விட ஆண்கள் சராசரியாக 27 நிமிடம் குறைவாகத் தூங்குவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.



இஸ்ரேலியக் கவசவாகனங்கள் ஜெவிஸ் குடியிருப்புப் பகுதியாகிய மொறாக் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று இடம்பெற்ற முஸ்லிம் கிளர்ச்சிக்காரரின் தாக்குதலில்ஒருஇஸ்ரேலியர் கொல்லப்பட்டதுடன் மூன்று படை யினர் காயமடைந்தனர்.

# சீனாவின் முன்னாள் கம்யூனிஸ்ட் தலைவர் வைத்தியசாலையில் அனுமதி!

-ஆளும்தரப்பினர் அச்சம்

சீனாவின் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் ஜாவோஜியாங் கடும் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்த இவர் ஜாவோ ஜியாங் 1989 ஆம் ஆண்டு தினாமன் சதுக்கத்தில் சனநாயகத்துக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது இராணுவம் நடத்தியஅடக்குமுறையை எதிர்த்துக் குரல் எழுப்பினார். இதைத் தொடர்ந்து கட்சிப் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். பிறகு வீட்டுக்காவலிலும் வைக்கப்பட்டார்.

கடந்த 15 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் இருந்த 85 வயது ஜாவோவுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் இறந்து போனால் அது ஆட்சிக்கு எதிரானஎதிர்ப்பைநாடு முழுவதும் ஏற்படுத்தும் என்று ஆளும் தரப்பினர் அஞ்சு கிறார்கள். அவருக்கு நுரையீரல் பிரச்சினைகள் மற்றும் நிமோனியா காய்ச்சலும் இருக்கிறது. இதற்கிடையில் அவர் இறந்து விட்டதாகச் செய்திகள் வெளியாகின. இதை அவரது குடும்பத் துக்கு நெருங்கியவர்கள் மறுத்துள்ளனர்.

# வயலில் கண்டெடுத்த பெட்டியை திறக்க முயல்கையில் குண்டுவெடித்தது

-மூன்று குழந்தைகள் பலி: பெற்றோர் படுகாயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தற்செயலாக நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 3 குழந்தைகள்உயிரிழந்தனர். அவர்களின் பெற்றோர் படுகாயம் அடைந்தனர். திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் நடந்தது. பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மஸ்டுன் என்ற ஊரைச் சேர்ந்த ஜான் முகமது என்பவர் வயல் வெளியில் ஒரு இறங்குப் பெட்டியைப் பார்த் தார். அதில் ஏதோ பொருள் இருக்கும் என்ற நம்பிக்கையில் யாருக்கும் தெரியாமல் அதை வீட்டுக்கு எடுத்து வந்தார்.

பெட்டியில் என்ன இருக்கிறது என்று பார்க்கும் ஆவலில் அவருடைய மனைவியும், 3 குழந்தைகளும் அருகில் திரண்டனர். பூட்டைத் திறக்க முடியததால் அதை சுத்தியல் கொண்டு ஓங்கி அடித்து உடைத்தார். அப்போது உள்ளே இருந்த வெடிகுண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்தன. அதில் அவருடைய 3 குழந்தைகளும் அங்கேயே இறந்தனர். ஜானும், அவருடைய மனைவியும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வெடிகுண்டுகளுடன் பெட்டி வயல் வெளிக்கு எப்படி வந்தது என்று பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## சனாதிபதியாக தெரிவு

(கீவ்)

உக்ரைன் நாட்டு சனாதிபதி தேர்வில் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவாளரும், எதிர்க்கட்சி வேட்பாளருமான விக்டர் யுஷ்செங்கோ வெற்றி பெற்றதாக மத்திய தேர்தல் திணைக்களம் உறுதி செய்தது.

முன்னாள் வங்கி அதிகாரியான 50வயது யுஷ்செங்கோ 51.99சதவீத வாக்குகள்பெற்று வெற்றிஅடைந்தார்.


# அரச ஊடகங்களின் இனவாதச் செயற்பாட்டுக்கு

# திருமலை தமிழ் மக்கள் பேரவை கண்டனம்

(திருமலை)

**துன்பச்சுமையால் துடிக்கும் இவ்வேளையிலும் அரசாங்கத்தினதும் அரச ஊடகங்களினதும் இனவாதச் செயற்பாடானது சமாதானத்திற்கு எதிரான மிக மோசமான விளைவுகளை ஏற்படுத் தும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தை வட கிழக்கின் பாதிக்கப்பட்ட பிரதேசங் களுக்கு செல்லவிடாது தடுத்தமையும், திருகோணமலைக்கு விஜயம் செய்த ஐ.நா. செயலாளர் நாயகத்தைப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்லாமையும், கிண்ணியா பிரதேசத்தில் வந்திறங்கிய செயலாளர் நாயகத்தை மோசமாகப் பாதிக்கப்பட்ட கிண்ணியா மருத்துவ மனையைக் கூட பார்வையிட அனுமதிக்காமையும், தமிழ் மக்கள் வாழும் அகதிமுகாம் என்று இனங்காணப்பட்ட ஆலங்கேணி அகதிகள் முகாம் பாதிக்கப்படாத மக்கள் அச்சத்தின் காரணமாக ஒன்றுகூடியிருந்த இடமேயாகும். இந்த முகாமிற்கு அவரை அழைத்துச் சென்றமை தமிழ் மக்களுக்கு எந்த துயரமும் இல்லை என்று காட்டும் விதத்தில் அரசாங்க அதிபரால் திட்டமிட்டு செய்யப்பட்ட மோசமான செயற்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகளை செய்வதனூடாக அரசும், அரச ஊடகங்களும் சமாதானத்திற்கு எதிரான சதி முயற்சிகளிலேயே தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை தெளிவாகக் காட்டுகின்றது. அரச ஊடகங்களில் தமிழ் மக்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்என்பதைத் தெளிவுடன் கூறிவைக்க விரும்புகின்றோம். ஊடகத்துறை அமைச்சர் இவ்வாறான பொய்யான செய்திகளை வெளியிடுவதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையாக ஏ-9 வீதியில் உழவு இயந்திரத்துடன் உந்துருளி மோதியதின் விளைவாக உந்துருளி பலத்த சேதத்துக்குள்ளான நிலையில் உள்ளதனை படத்தில் காணலாம். (படம் - சோதி)

# போராளிகளின் நிவாரண நடவடிக்கைக்கு அம்பாறை அதிரடிப்படையினர் அச்சுறுத்தல்

## உடுமங்கல கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

அம்பாறை மாவட்டத்தில் தமது போராளிகளின் நடவடிக்கைகளுக்கு அதிரடிப்படை தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை விடுத்து வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பில் கருத்துரைக்கும் மட்டக்களப்பு உடுமங்கலகோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் நிலாகரன், அதிரடிப்படையினர் தமது போராளிகள் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதை அனுமதிக்கிறார்கள் இல் [illegible] எனத் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் தமது பெண்போராளிகள் அகதி முகாம் ஒன்றுக்கு சென்று பெண்களுக்கான ஆடைகளை விநியோகித்த வேளையில் அதனை அதிரடிப்படையினர் தடுத்ததாகவும் நிலாகரன் குறிப்பிட்டார்

# நிவாரணப் பொருட்கள் மோசடி கிராம சேவகர் உட்பட இருவர் கைது

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணப் பொருட்களை மோசடி செய்தார்கள் எனும் குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை மாவட்டத்தில் கிராம சேவை அலுவலகர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

புல்மோட்டை கிராம சேவை உத்தியோகத்தர் ஜமால்தீன் முபாறக், கச்சேரி வாகன சாரதி கே.பி.ஜினதாச ஆகியோரே நேற்று முன்தினம் ஹொரவப்பொத்தானை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பொது மக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து வாகன சாரதியின் சகோதரியின் வீட்டிலிருந்து பால்மா, பருப்பு, சீனி, கோதுமை மா மற்றும் குழந்தைகளுக்கான பால்மா உட்பட பல்வேறு நிவாரணப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் ஹொரவப்பொத்தானை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நீதிபதி ரவீந்திர அமர ரணாஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு எதிர்வரும் 16ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

# சுனாமி அனர்த்தத்தினால் திருமலையில் உயிரிழந்தோர் 1025 என அறிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில், சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1025 என்று திருகோணமலை மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. செயலக அறிக்கையின்படி, காணாமற் போனோரின் எண்ணிக்கை337 என்றும் அடையாளங் காணப்படாமல் புதைக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 51 என்றும் தெரிவிக்கப்பட்டது. கிண்ணியாவில் 150 பேரும், வெருகலில் 100 பேரும், மூதூரில் 77 பேரும், குச்சவெளியில் 3 பேரும், திருமலை நகரில் 2 பேரும் காணாமற் போயிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. குச்சவெளியில் 5 பேரும்,வெருகலில் 21 பேரும், திருமலை நகரில் 25 பேரினதும் சடலங்கள் அடையாளங் காணப்படாமல் புதைக்கப்பட்டன. உயிரிழந்தோரின் எண்ணிக்கை பிரதேச ரீதியாக வருமாறு. கிண்ணியா 451,மூதூர் 279, குச்சவெளி 150, திருமலை பட்டினமும் சூழலும்89, வெருகல் 50,பதவிசிறிபுர 06. (25)

# பாதிக்கப்பட்ட மட்டு-அம்பாறை மக்களுக்கு உடன் உதவிய

# த.த.தொழில் நுட்ப ஒருங்கமைப்புக்கு கௌசல்யன் பாராட்டு

கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களுக்கு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (TITA) அனுப்பி வைத்த மருந்துப் பொருட்கள், மின்பிறப்பாக்கி, உணவுகள், உடுதுணிகள், நீர்த்தாங்கிகள் என்பன பெரும் உதவியாக இருந்ததாகத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் இவ் அமைப்புக்கு தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை வடக்கு, கிழக்கு கரையோர பகுதிகளைப் பாரியளவில் தாக்கிய போதும் உடனடியாக இப்பகுதிக்கு உரிய எந்த உதவியும் செல்லாத போது தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியுடன் இப்பகுதிகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்குபடுத்தி இருந்த மருத்துவ முகாம்களுக்கு மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.பவளகாந்தனின் இல்லம் மீது [illegible] இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. சிங்களவாடியிலுள்ள அவரது இல்லம் மீது இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ள போதிலும் குறிப்பிடத்தக்க சேதங்கள் இல்லை. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவமானது என்ன காரணத்திற்காக இடம் பெற்றது என்பது குறித்து இது வரை கண்டறியப்படவில்லை. இவரது மனைவியும் பட்டிருப்பு வலயக கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றுகின்றார்.

# நெல் வயலில் எரிவந்த நோய் கண்டால் உடன் மருந்து விசிற ஆலோசனை

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் வயல்களில் எரிவந்த நோய்த் தாக்கம் அதிகம் காணப்படுகிறது. சீரற்ற கால நிலை காரணமாக வயல்களின் எரிவந்த நோய் காணப்படுகின்றது. இந்நோய் பயிரின் எல்லாப் பருவங்களிலும் பரவி பாதிப்பினை ஏற்படுத்தும். நோயின் தாக்கமானது நெல் இலைகளில் கண்வடிவில் புள்ளிகள் காணப்படும் புள்ளிகளின் ஓரங்கள் கருஞ் சிவப்பு நிறமாகக் காணப்படும் முதிர்ந்த பயிரில் கழுத்துப் பகுதியில் கருமை நிறமாக காணப்படும் எனவே, விவசாயிகள் தங்கள் வயல்களை அவதானித்து தாக்கம் ஏற்பட்டவுடன் வயலில் உள்ள நீரை முற்றாக வெளியேற்றி பங்கசு நாசினிகளான ஹினோசான், பியூஜியோன், ரொப்சின் கசுமின் என்பவற்றில் ஒரு மருந்தைத் தெரிவு செய்து சிபார்சின்படி விசிறவும் மேலதிக விபரங்களுக்கு அண்மையில் உள்ள விவசாய போதனாசிரி யரை அணுகி மேலதிக விபரங் களை பெற்றுக்கொள்ளுமாறு முல்லை மாவட்ட உதவி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (5)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது திட்டிய பெண்மணி புலிகளைச் சந்தித்த பின் அவர்களைப் பாராட்டுகிறார்

## பா.உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன

தமிழீழ விடுலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாம் செய்து கொண்டபோது களுத்துறையிலுள்ள ஒரு பெண்மணி என்னைத் தொலை பேசியில் மிகவும் தரக்குறைவாகத் திட்டியதுடன் என்னை ஒரு துரோகியெனவும் நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் திட்டினார். அதே பெண் பின்னர், புலிகளின் பிரதேசத்துக்குப் போய்த் திரும்பிய பின்னர் அவர்களை வானளாவபுகழ்ந்தார். முக்கிய நிலைமைக்குப் புரிந்துணர்வு இல்லாமை தான் காரணம். மேற்கண்டவாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன குறிப்பிட்டார். “அதிகாரப் பரவலாக்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழியாகும்” என்னும் பொருளில் கொழும்பு கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் சனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கம் மற்றும் சனநாயகத்துக்கும் சிறுபான்மை உரிமைகளுக்கும் மற்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்குமான கூட்டமைப்பும் இணைந்து நடத்திய இரண்டு நாள் வதிவிட செயலமர்வில் உரையாற்றும் போதே ஜெயலத் ஜெயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, குறிப்பிட்ட பெண்மணி யாழ்ப்பாணம் ஏ-9 பாதை ஊடாக நாகவிகாரை உட்பட ஏனைய இடங்களுக்கும் சென்று விட்டுத் திரும்பிவந்து, எனக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கூறினார்.

நான் யாழ்ப்பாணம் சென்றேன். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கதைத்தேன். மிகவும் நல்லவர்கள். அவர்களுக்கு நான் எனது தொலைபேசி இலக்கம், முகவரியைக்கூடக் கொடுத்து விட்டு வந்துள்ளேன். அவர் எனது வீட்டுக்கு வருகின்றேன் என்றும் முன்பு உங்களைத் தெரியாமல் திட்டித் தீர்த்துவிட்டேன் என்றும் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகத்தை உடனடியாக ஏற்க வேண்டும் என்பதில்லை. இதேநேரம், இதன் அடிப்படையில் உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்கலாம். சமாதானப் பேச்சு என்பது உண்மையான இதய சுத்தியுடனும் துணிச்சலுடனும் பேச வேண்டியது. இத்தகைய ஒரு நிலைமை - சூழ்நிலை - காணப்படுமாக இருந்தாலே தமிழீழ விடுதலைப்புலிகளும் நம்பிக்கையுடன் பேச்சுக்கு வரமுடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினை இழுபட்டுக் கொண்டு செல்வதற்கு அரசில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே காணப்படும் முரண்பாடுகளே காரணம் எனவும் குறிப்பிட்டார்.

## கூ.அ.பி.உ ஆணையாளர் அலுவலகம் புதுக்குடியிருப்பில்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லை வீதி சேரன் வாணிபம் அருகாமையில் 10 வட்டாரம் புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் இயங்குகிறது. (08)

# த.பு.கழக நிவாரண நடவடிக்கைகளுக்கு அயர்லாந்து அரசாங்க பிரதிநிதிகள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

**சுனாமி கடற் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். வடமராட்சி மக்களுக்காக தமிழீழ விடுதலைப்புலிகளாலும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினராலும் மேற்கொள்ளப்படும் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு அயர்லாந்து நாட்டின் அரசாங்க பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் யாழ்.வந்த இக் குழுவினர் நெல்லியடியில் உள்ள சுனாமி அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்புக் கரும பீடத்தில் வைத்து இக் கரும பீடச்செயலணியின் பிரதம இணைப்பாளர் பாலையா மற்றும் இணைப்பாளர் சி.வீ.கே. சிவஞானம், உதவி இணைப்பாளர் விக்கினேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்படி அயர்லாந்து நாட்டின் அரசாங்கப் பிரதிநிதிகள் இவ்வாறு பாராட்டினைத் தெரிவித்துள்ளனர்.

இச் சந்திப்பின்போது சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சுண்டிக்குளம் தொடக்கம் தொண்டமானாறு வரையிலான பிரதேசங்களில் புலிகளாலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினராலும், அனர்த்த நிவாரண உதவிக்கான விசேட கருமபீடச்செயலணி மூலம் வழங்கப்பட்டு வரும் உதவிகள் பற்றி அயர்லாந்து அரசபிரதிநிதிகளுக்கு விளக்கப்பட்டதுடன் இக் குழுவினர் புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகள் இடம் பெறும் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர். (33)

## கொடிகாமத்தில் தொடராக கடைகள் உடைத்துத்திருட்டு

கொடிகாமத்தில் கடந்த புதன் இரவு கண்டி வீதியில் பேருந்து நிலையத்திற்கு முன்னால் இருந்த கடையொன்றின் கூரைச் சீற்றை உடைத்து உள்ளே புகுந்த கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இக்கடையில் இருந்து சிகரட் பண்டல்கள், பிஸ்கட்பெட்டிகள், சோப் வகைகள் என 75 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கடந்த வாரத்தில் கொடிகாமத்தில் இடம்பெற்ற மூன்று கடைகளில் அடுத்தடுத்து இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கண்ணன் களஞ்சியம் எனப்படும் இக்கடை பருத்தித்துறை வீதியில் இருந்து பாதுகாப்பு காரணங்களுக்காக இடம்மாற்றப்பட்டு, கண்டிவீதியில் செயற்படத்தொடங்கிய சில நாட்களுக்குள்ளேயே மீண்டும் கடைகொள்ளையிடப்பட்டுள்ளது. இவற்றைத் தொடர்ந்து மீண்டும் கொள்ளைகளைத்தடுக்கும் முகமாகக் கொடிகாமம் நகரப்பகுதியில் விழிப்புக்குழு செயற்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## சாவகச்சேரியில் வணிகர் மன்றம் கோதுமை மாவு விநியோகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் இயங்கி வரும் உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகளில் உணவைத்தயாரிக்கத் தட்டுப்பாடாக இருந்த கோதுமை மாவை தாம் விநியோகம் செய்துவருவதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக நிலவி வந்த இப்பிரச்சினையால் உணவகங்களில் மா தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி பொருட்களுக்கு விலைகள் கூட்டப்பட்டதால் இவற்றை உடனடியாக கட்டுக்குள் கொண்டு வரவே சாவகச்சேரி நகரத்திலுள்ள உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளுக்கு மாவினை கைத்தொழில் வணிகர் மன்றம் உடனடியாக விநியோகம் செய்துவருகிறது. (28)

## - சமாச அலுவலகத்தினுள் நுழைந்து - இடம்பெயர்ந்தோரின் விபரம் கேட்டு சிறிலங்கா இராணுவத்தினர் மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகத்தில் உள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சங்கசமாச அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து சிறி லங்கா இராணுவத்தினர் அவ் அலுவலகத்தில் இருந்தவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

சம்பவ நேரம் மேற்படி அலுவலகத்திற்குச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர். அங்கிருந்த சமாச உறுப்பினர்களிடம் இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களது விபரங்களைத் தருமாறு கோரியுள்ளனர்.

ஆனால் படையினர் கோரியபடி விபரங்களைக் கொடுக்க மறுத்த சமாச உறுப்பினர்கள் இவ்வமைப்பு ஆக்கிரமிப்பாளர்களாகிய படையினருக்கு விபரம் திரட்டிக் கொடுப்பதற்கான ஓர் அமைப்பு இல்லை எனவும் விளக்கமளித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்த சங்க உறுப்பினர்களை மிரட்டிப் பணியவைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் அவர்கள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்றதால் இருதரப்பினருக்குமிடையே கடும் கருத்து மோதல், வாக்குவாதம் இடம்பெற்றதுடன்,

சமாச உறுப்பினர்கள் அலுவலகத்தை மூடிவிட்டு வெளியேறிவிட்டனர். இதனையடுத்து அங்கு திரண்ட படையினர் தீவிர அச்சுறுத்தல்களில் ஈடுபட்டும் விபரம் கொடுக்கப்படாததை அடுத்தும் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர். படையினரின் இந்நடவடிக்கைக்கு மேற்படி சமாசத்தால் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## அரச வங்கிகளால் வழங்கப்படும் நாட்காட்டிகள் பௌத்த சிங்கள கலை அம்சங்களை மட்டும் சித்திரிக்கிறது

### -யாழ்.குடாநாட்டில் தமிழ் அறிஞர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

அரச வங்கிக்கிளைகளால் யாழ்.குடாநாட்டு வாடிக்கையாளர்களுக்காக விநியோகிக்கப்பட்டு வரும் நாட்காட்டிகள் அனைத்தும் முற்றுமுழுதாக பௌத்த சிங்கள கலை அம்சங்களையே சித்திரிப்பதாக யாழ்.குடாநாட்டு சமூக ஆர்வலர்களும், தமிழ் அறிஞர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் காணப்படும் பௌத்த சிங்கள கலை அம்சங்களுக்கு நிகராகவும், அவற்றை விட மிகையானதாகவும் தமிழர் வாழ்வியல் வெளிப்பாடுகள் பற்றிய கலைவடிவங்களும் பேணிப் பாதுகாத்து நினைவு கூரப்படவேண்டிய நினைவுச்சின்னங்களும் சிற்ப ஓவியங்களும் உள்ளன.

எனினும் தமிழருக்கு உரித்தான சிற்ப, சித்திரக்கலை வடிவங்களைத் தவிர்த்து முற்றுமுழுதாக பௌத்த சிங்கள சிற்ப சித்திரக் கலைகளை வெளிப்படுத்தும் வர்ணப்படங்களுடனான நாட்காட்டிகளையே அரச வங்கிகளின் கிளைகளினூடாக வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இது தமிழர் கலை பாரம்பரியங்களை மழுங்கடித்து இருட்டடிப்புச் செய்வதுடன் பௌத்த சிங்களக் கலை பாரம்பரியங்களே தனித்துவமானது என்பதைப் பரப்பும் மிகவும் ஆபத்தான அரசின் ஓர் முயற்சி எனவும் சுட்டிக்காட்டியே இவ்வாறு விசனம் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் விதமானதும் தமிழர் கலை வடிவங்கள் நினைவுச் சின்னங்கள் என்பன பொறிக்கப்பட்ட நாட்காட்டிகளையே தமிழர் தாயகப் பிரதேசங்களின் பாவனையில் விட உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (33)

## பொலிசாரால் தாக்கப்பட்டவரிடம் ம.உ ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி இடம் பெயர்ந்தோர் முகாமில் வைத்து மீனவ சங்கப் பிரதிநிதியொருவர் பொலிசாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலைக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள், பொலிசாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இராசதுரை இந்திரராசாவினது வாக்கு மூலத்தினைப் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரியிடமும் விசாரணைகளை நடாத்தியுள்ளனர். (27)

## யாழ்.பல்கலையில் பொங்குதமிழின் 4ஆம் ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழத்தில் உருவான பொங்குதமிழ் நிகழ்வின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் 17.1.2005 காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், அகவணக்கம், பொங்குதமிழ்ப் பிரகடனம், சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன. தமிழ் மக்கள் பாரிய இராணுவ அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தவேளை தமிழீழ விடுதலைப்புலிகளைத் தமது ஏக பிரதிநிதிகளாக ஏற்றுத் தமது அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, தனித்தேசிய இனம், மரபுவழித் தாயகம் என்பவற்றை வலியுறுத்தி தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமது அபிலாசைகளை உலகிற்கு உணர்த்திய 17.01.2001 'பொங்குதமிழ் அந்நாளின் 4ஆம் ஆண்டு நிறைவுநாளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுள்ளனர். இந் நிகழ்வில் அரசியல்துறை முக்கிய உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொள்ளவுள்ளனர். (36)

### நிவாரணம் வழங்கல்

(நமது நிருபர்)

மூளாய் சுழிபுரம் சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் கடலனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த சனிக்கிழமை நிவாரணப் பொருட்களை வழங்கியிருந்தது. இந்நிறுவனம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, [illegible]ம்பர் மலை பாடசாலை, சிதம்பராக்கல்லூரி ஆகிய நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கும் மற்றும் இன்பருட்டிப்பகுதியில் மீளக்குடியேறி வரும் மக்களுக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது. குடும்ப எண்ணிக்கைக்கு அமைய அரிசி, சீனி, பருப்பு பால்மா, மெழுகுதிரி, தீப்பெட்டி என்பனவும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முட்டை மாவும் வழங்கப் பட்டது. (45)

## 48 முஸ்லீம் குடும்பங்களுக்கு திருமலையில் த.பு.கழகம் நிவாரணம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், திருகோணமலை நகரில் சோனகத்தெருவில் சுனாமி அனர்த்தத்தினால் கடற்றொழிலை இழந்த 48 முஸ்லிம் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை கடந்த திங்கட்கிழமை வழங்கியது. முகைதீன் முஸ்லிம் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நிவாரணங்கள் வழங்கப்பட்டன. தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் ஜெகா,முகைதீன் முஸ்லிம் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம் சாகுல் ஹமீதுக்கு முதலில் நிவாரணப் பொதியை வழங்கினார். இந் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட சபை உறுப்பினர் எ.எஸ். சாகுல்ஹமிரும் பங்கு பற்றி உரை நிகழ்த்தினார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்.மாவட்ட தே.எ.பேரவை உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்த குடும்பங்களுக்கு உதவித் தொகையை வழங்க யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை முன் வந்துள்ளது.

இதன் முதற் கட்டமாக 110 குடும்பங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் மேலும் பல குடும்பங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலான செயற்திட்டங்களையும் தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொள்ளவுள்ளதாகவும் சிறில் தெரிவித்தார்.

# எமது மக்களின் பேரழிவை குறைத்து மதிப்பீடு செய்து இலாபம் பெற நினைத்தால் விளைவுகள் வித்தியாசமானதாக இருக்கும்

**யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச்சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் அவர்களுடனான நேர்காணல்**



'சுனாமி' பேரலைகள் யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாகவும் அதன் பின்னர் மீட்பு நடவடிக்கைகள் பற்றியும் நிவாரண உதவிகள் படையினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அத்து மீறல்கள் என்பன பற்றியும் மீனவர் சமூகத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும், யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் ஈழநாதம் நாளிதழுக்காக வழங்கிய நேர்காணலை இங்கே தருகின்றோம்.

**அ.லோகீசன்**

எங்களுடைய வாழ்க்கையும் எங்களுடைய வளமும் கடல் அன்னையுடைய தயவால் தான் ஏற்பட்டது. ஒரு இயற்கையின் கொதிப்பால் கடல் அன்னை எம்மீது மூசி மோதிவிட்டாள். அதற்காக நாங்கள் கடல் அன்னையை விட்டு விலகிப் போய்விட முடியாது. ஏனெனில் எங்கள் வாழ்வும் வளமும் கடல் தான்.. ஆகவே இன்று எங்களைக் அடித்த கடல்அன்னை அமைதியாகி எங்களை மீண்டும் அரவணைப்பாள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.. இதில் வேதனை என்னவென்றால் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து கூடிவாழ்ந்த உறவுகள் சிதைந்து போய்விட்டார்கள். இது வேதனையான ஒன்று. இந்த இழப்பில் இருந்து மீள்வது என்பது கஷ்ரமான ஒன்று. கடற்றொழிலாளர்கள் கடலில் மீண்டும் தொழில் செய்வோம் என்ற நம்பிக்கையை இன்னும் இழக்கவில்லை. அவர்கள் எப்பொழுதும் போராடிக்கொண்டு போராட்டத்தின் வடிவிலேயே வாழ்ந்தவர்கள். எனவே கடற்றொழில் சமூகம் எந்தப் போராட்டத்தையும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றது. மீண்டும் அவர்கள் புதுப்பொலிவு பெறுவார்கள் இது உறுதி.

*.சுனாமி கடல் அனர்த்தம் யாழ். மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காரை நகரில் இருந்து வடமராட்சி கிழக்கு வரையிலான நீண்ட பிரதேசம் முற்று முழுதாகவே பாதிக்கப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்குப் பகுதியில்தான் அதிகமான உயிர், சொத்திழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தொழில் இழப்புக்களைப் பொறுத்த வரையில் கரையோரப் பகுதியில் தொழிலுடன் சம்பந்தப்பட்ட சகல விதமான உபகரணங்களுமே முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இதில் எவற்றையாவது மீட்டு மீண்டும் பயன்படுத்தக் கூடிய நிலை இல்லை.

*.உயிரிழப்பு, தொழில் இழப்புக்கள் பற்றிய விபரங்கள் ஏதாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா?

இவை பற்றி பதிவுகள் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை. குறைந்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ள பகுதிகளில் இதற்கான வேலைகள் நடைபெறுகின்றன. வடமராட்சி கிழக்குப் போன்ற அதிக அழிவுகள் ஏற்பட்டுள்ள பகுதிகளில் இந்த வேலைகளை நாங்கள் முனைப்புடன் நகர்த்தவில்லை. ஏன் என்றால் அதிக இழப்புக்கள் ஏற்பட்ட பகுதி. இந்த மக்கள் துயரத்தில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களின் வேதனைகள், துன்பங்கள் மத்தியில் நெருக்கடியான நிலையில் அவர்களிடம் இவற்றைக் கேட்டுப் பதிவு செய்ய விரும்பவில்லை. முகாம் வாழ்வில் இருந்து வெளியேறிய பின்னர் அது பற்றிய சில விபரங்களை எமது சங்கங்கள் ஊடாகப் பதிவு செய்வோம்.

*. இவர்களுக்கான உதவிகள் ஏதும் கிடைக்கின்றதா? அது எவ்வாறு?

கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குப் போக முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதற்கான உபகரணங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை. இந்த நிலையில் இவர்களுக்கான நிவாரண ஒழுங்குகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. சில பகுதிகளில் இதுவரை எந்த உதவிகளும் கிடைக்கவில்லை. இந்த நிவாரண உதவிகள் திருப்தி தரவில்லை.

*.அரச உதவிகள் இதுவரை கிடைக்காதது பற்றி?

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். இந்த நிலையில் நாங்களும் அதனையே பார்த்துக் கொண்டு முழுமையாக இருக்க முடியாது. எங்கள் மக்கள் அவலப்படுகிறார்கள். அவர்களை அவலத்தில் இருந்து மீட்டெடுத்து அவர்களுக்கான குடியிருப்புக்களை நல்ல முறையில் அமைத்து குடியமர்துவதற்கான செயற்திட்டங்களை நாங்கள் வகுத்து அதனை செயற்படுத்துவதற்கான வேலைகளில் சங்கங்களும், சமாசங்களும் ஒன்றுபட்டு செய்து வருகிறோம். இவர்களுக்கான அரச உதவிகள் பற்றி அரச அதிபர், அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கதைத்திருக்கின்றோம். பெரிதாகக் கூறும்அளவிற்கு எதிர்பார்க்கும் எந்த உதவிகளும் கிடைக்கவில்லை. எங்களுடைய செயற்திட்டத்தின் படி தொழில்களுக்கான இழப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறோம். அதற்கான முடிவுகளை வெகு விரைவில் நாங்கள் வெளியிடுவோம்.

*.கடல் அனர்த்தத்தின் சேதங்களை இழப்பின் சோகத்தில் இருக்கின்ற மக்களிடம் சிறிலங்காப் படையினரும் பொலிசாரும் பதிவு செய்து வருவதாகத் தெரிய வருகிறது. இது பற்றி உங்கள் கருத்து?

எங்களுடைய மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் எங்களுடைய மக்களுக்குத்தான் தெரியும். அவர்களிடம் இருந்து பொருட்கள் தொழில்கள், கலங்கள், படகுகள், வலைகள் அனைத்தும் அவர்களுக்குத்தான் தெரியும். இதை அங்கு காவலரண்களிலும், முகாம்களிலும் இருந்த சிங்களப் படைகள் அறிந்திருக்க எந்த வாய்ப்பும் இல்லை. அவர்கள் தவறான சேதங்களை வெளியில் காட்டுவதற்கே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். படையினரும் பொலிசாரும் இணைந்து மக்களை வற்புறுத்தி தகவல்களை சேகரிப்பதாக எங்களுக்கும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்தச் செயற்பாடு எந்த வகையிலும் பொருந்தக்கூடியது அல்ல. எங்கள் மக்களைப் பொறுத்த வரையில் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பு. இதனைக் கூட்டியோ அல்லது குறைத்தோ கூறி அவர்களிடம் பிச்சை கேட்கும் நிலையில் நாங்கள் இல்லை. எங்கள் உண்மை நிலையைத் தான் நாங்கள் தெளிவுபடுத்துகிறோமே தவிர வேறு எதையும் நாங்கள் மிகைப்படுத்தவில்லை. ஆனால் படையினரதும் பொலிசாரதும் இந்தச் செயற்பாட்டின் பின்னணி என்னவென்றால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அழிவுசிறியது. என்று காட்டி இவர்களுக்குக் கிடைக்கின்ற நிவாரணங்கள், உதவிகள் அனைத்தையும் தென்பகுதிக்குக் கொடுப்பதற்கான முயற்சியாகவே நாங்கள் கருதுகின்றோம். ஏன் என்றால் எங்கள் மக்கள் அனைத்தையுமே இழந்திருக்கிறார்கள். இந்த அழிவுகளை நல்ல முறையில் மதிப்பீடு செய்து பார்த்தால் தெரியும் எங்கே அழிவுகள் அதிகம் என்பது. வலிகாமம் மேற்கு சங்கங்களிடம் படையினர் போய் தகவல்களைச் சேகரித்து அதில் இருந்த இழப்புத் தொகையை குறைத்து கையொப்பமிடுமாறு வற்புறுத்தி பெற்றுச் சென்றிருக்கின்றார்கள். சிலர் அதற்கு மறுப்பும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே இந்த நிலையில் பாதிப்புக்குள்ளாகிப் போய் நொந்திருக்கின்ற எங்கள் மக்களிடம் இப்படியாக கேவலமான முறையில் நடந்துகொள்வது எமக்கு மிக்க மனவருத்தத்தைத் தருகிறது.

* நீங்கள் இவ்வாறு கூறுகிறீர்கள் படையினரின் இத்தகைய நடவடிக்கை பற்றி எங்காவது முறையிட்டிருக்கிறீர்களா?

இதனைப் பற்றி எங்காவது போய் முறையிடக் கூடிய நிலையில் இல்லை. எங்கள் மக்கள் நொந்துபோய் இருக்கிறார்கள். துயரத்தின் விளிம்பில் நிற்கின்ற எங்கள் உறவுகளுக்கு ஆறுதல் கூறி அவர்களை அதில் இருந்து விடுபடுவதற்கான ஆரோக்கியமான-நிச்சயம் வேண்டிய வேலைகளை செய்து வருகிறோம்.

நாங்கள் வேதனையின் விளிம்பில் இருக்கின்ற இந்த வேளையில் அரச படைகளினதும், பொலிசாரதும் நடவடிக்கைகள் எமக்கு ஆத்திரத்தை தருகிறது. எங்களுடைய இழப்புக்களைக் குறைத்து மதிப்பிட்டு அதன் மூலம் தாங்கள் பலன் பெற வேண்டும் என்று யாரா வது அநாகரிகமான முறையில் சிந்தித் தால் அதன் விளை வுகள் வித்தியாசமா னதாக இருக்கும்.

* அரசின் உதவிகள் எதுவும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்போதும் உங்களிடம் இருக்கிறதா?



வடமராட்சி கிழக்கு

நிச்சயமாக அரசின் உதவிகளை நம்பி நாங்கள் வாழவில்லை. இந்தப்போராட்ட காலத்தில் கூட எங்களுக்கு எந்த உதவிகளையும் செய்யவில்லை. 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடற்றொழில் திணைக்களம் வழங்கிய மானியத்தைக் கூட இதுவரை அரசு எங்களுக்குத் தரவில்லை. இந்த நிலையில் எங்களுக்கு அரசாங்கம் ஏதும் உதவிகளை செய்யும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் வாழவில்லை. எங்களுக்குத் தேவையான தொழில்வளங்களை ஏற்படுத்திய பின்னர் நாங்கள் எங்கள் கடலில் எங்களது நிலையைத் திடப்படுத்திக் கொள்ளுவோம். இதுவே எங்கள் நம்பிக்கை.

* உதவிகள் எதுவும் இல்லை தொழிலை ஆரம்பிப்பீர்களா?

உண்மையில் இழப்பு என்பது கணக்கிட முடியாதபாரிய இழப்பு. அனேகமான பிரதேசங்களில் மீண்டும் தொழிலை உருவாக்குவது மிகவும் கடினம். அதற்காக அரசாங்கம் தரும் என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. வெளிநாடுகளில் உள்ள உறவுகள் எமக்கான சில உதவிகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்படியான உதவிகளையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் பெற்று மக்களின் வாழ்வில் திருப்பம் ஏற்படுத்தலாம். இனிவரும் காலத்தில் பழைய காலத்தில் இருந்ததைப் போன்று சிறிய தொழில்களை விட்டு விட்டு நவீன முறையில் தொழில் திட்டங்களை முன்னெடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம்.

* கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாது நெருக்கடியான சூழலில் இருக்கின்ற நிலையில் இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளில் காவலரண்களையும் முகாம்களையும் முட்கம்பி வேலிகளையும் அமைத்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் இது பற்றி?

இதைப்பற்றித் தான் அனைவரும் பேசுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை ஒரு துரும்பைக் கூட எடுத்துக்கொண்டு தாங்கள் இருக்கின்ற இடங்களுக்கு வந்து சேர வில்லை. ஏனென்றால் அவர்கள் அடைந்திருக்கின்ற துன்பம் துயரம் அனைத்திலிருந்தும் மீளமுடியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கரையோரத்தில் உள்ள இராணுவத்தினர் மக்களின் உடமைகளைச் சூறையாடி தங்களை நிலைப்படுத்துகின்றார்கள். இது மிகவும் வேதனையான சம்பவம். இப்படி யாழ். மாவட்டத்தின் கரையோரப்பகுதிகள் எங்கும் நடைபெறுவதாக எங்கள் சங்க உறுப்பி னர்கள் கூறி வருகின்றனர். ஒரு நாட்டினுடைய இராணுவம் குடியிருப்புக்களில் மக்கள் இருக்க முடியாது அவலப்பட்டுப் போய் முகாம்களில் இருக்கின்ற நிலையில் அந்த மக்களின் எஞ்சிய பொருட்களை சூறையாடித் தங்களைப் பலப்படுத்துகின்ற அநாகரிகமான செயல் எங்குமே நடந்திராத ஒரு அவமானமான செயல்.

* யாழ்.மாவட்டத்தில் மீட்புப்பணிகள் எப்படி நடைபெற்றது. அதில் யார் மும்முரமாக நின்று செயற்பட்டார்கள்?

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முல்லைத்தீவிலும் மீட்புப் பணியைப் பார்த்தேன். முற்றுமுழுதாக விடுதலைப்புலிகள் தான் செய்தார்கள். குறிப்பாக கடற்புலிகள் அதிக பங்களிப்பைச் செய்திருந்தார்கள். கடற்புலிகளும் கரையோரமக்களும் ஒன்றிணைந்தவர்கள். ஆகவே இந்தநிலையில் அவர்கள் இந்தத் துயரில் பங்களிப்பது எமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது. இந்தச் சமூகமே அழிந்துவிட்டது என்று கருதி மகிழ்ந்தவர்களுக்கு இது பெரிய இழப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விடுதலைப்புலிகளுடைய பங்களிப்புக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கிறோம். வரவேற்பளிக்கிறோம். அவர்கள் எப்போதும் எங்களுடன் இணைந்தே இருப்பார்கள். நாங்களும் அவர்களுடன் இணைந்து தான் இருப்போம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான போராளிகளின் வேகமான மனிதாபிமானப் பணிகுறித்து நேரில் கண்டவற்றை விபரிக்கும் சர்வதேச ஊடகவியலாளர்

*சுனாமி பேரலையின் அனர்த்தம் இடம் பெற்றவுடன் வடபகுதிக்கு விஜயம் செய்து அதன் பாதிப்புக்கள் பற்றியும் அந்தப் பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான உடனடி மனிதாபிமானப் பணிகளை தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் குறைந்த வளங்கள் இருந்த போதும் சிறப்பான முறையில் கட்டுப்பாட்டுடன் நேர்த்தியாக மேற்கொண்டது பற்றியும் தாம் நேரில் அவதானித்தவற்றை விபரிக்கிறார் வெளிநாட்டு ஊடகவியலாளரான கிம்பார்க்கர் (TRIBUNE FOREIGN CORRES PONDENT)*

தமிழீழ விடுதலைப்புலிகள் சிறுவர்களைப் படையில் இணைத்து தற்கொலைத் தாக்குதலுக்கு அணிகளை உருவாக்கும் ஒரு அமைப்பாகவே இதுவரை கணிக்கப்பட்டது.

ஆயினும் தற்போது அவர்கள் இரண்டு தசாப்த கால யுத்தத்தின் மூலம் சிறப்பான ஒரு இராணுவத்திற்குரிய திறனைப் பெற்றிருப்பதை சுனாமி அலைப்பாதிப்பிற்குள்ளானவர்களை மீட்கும் பணியிலும், நிவாரண உதவிகளை வழங்குவதிலும் இருந்து தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. அவர்கள் தனிநாட்டை நீண்டகாலமாக கோரி போரிட்டுவந்தனர். சுனாமி அலைப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்கள் தனியான ஒரு நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதை உணர்த்தியுள்ளனர். இது சிறிலங்கா அரசின் உதவிப் பணிகளையும் விஞ்சுகிறது. அரசியல் ரீதியான கருத்து முரண்பாடு காரணமாக அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு உடனடிப் பணிகளை மேற்கொள்ளவில்லை என தயாமாஸ்டர் தெரிவித்தார். பாதிக்கப்பட்டு இரண்டு நாட்கள் வரையும் எவ்வித மீட்புப் பணியையோ, நிவாரணப் பணியையோ அரசு இப்பகுதிகளில் மேற்கொள்ளவில்லை என்று அவர் தெரிவிக்கிறார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசியல் காரணங்களினால் நிவாரணப்பணி மேற்கொள்வதில் இருட்டடிப்பு நடைபெறுவதும், சிக்கல் தோன்றியிருப்பதும் தெளிவாகத் தெரிகிறது. வெளிநாட்டு இராணுவத்தினரும் மீட்புப் பணியாளர்களும் ஏனைய பகுதிகளில் இடிபாடுகளை அகற்றுதல் பாலங்கள் அமைத்தல் தேடுதல்களிலெல்லாம் ஈடுபடுகின்றனர். ஆனால் புலிகளின் பகுதிகளில் அவர்கள் எதனையும் செய்யவில்லை. மேற்படி அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகள் விடுதலைப்புலிகளை தீவிரவாதிகளாகவே கருதுகின்றன.

சிறிலங்கா அரசோ புலிகளின் பகுதிகளின் பிரதேசத்துக்கு உதவிகள் முதலில் தாமதமாகக் கிடைத்ததென்றும் தற்போது சில அதிகாரிகள் தாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இப் பகுதிகளுக்கு உதவிப் பொருட்கள் சென்றடைவதை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் யுத்த நேரத்தின்போது கூட இவ்வாறான ஒரு அதிகாரிகள் மட்ட ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்றும் கூறுகின்றது. அரசும் ஆரம்பத்தில் ஒன்றும் நடைபெறாத போதும் இது தொடர்பில் தற்போது பணியாற்றும் ஊழியர்களைக் கண்காணிப் பதாகவும் தெரிவிக்கின்றது. அத்துடன் கடந்த 30ஆம் திகதிக்குப் பின்னர் நிவாரணப் பொருட்களை ஏற்றிய 500 ட்ரக் வண்டிகள் அப்பகுதிக்குச் சென்றிருப்பதா கவும் அரசு கூறுகின்றது.

ஆரம்பத்தில் தாம் பலபிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததை நிரஞ்சன் டி சொய்சா என்ற தேசிய நடவடிக்கை செயலகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அலைத் தாக்கம் ஏற்பட்டிருப்பது மிக அதிகம். மீன்பிடி கிராமங்கள் முழுதாக அழிவுற்றுள்ளன. இந்தப் பாதிப்பிற்குள்ளானவர்கள் படும் அவலத்தை விடுதலைப்புலிகள் ஒளிப்பதிவு செய்து படமாக்கி வைத்துள்ளனர். "இயற்கையின் கொடூரமும், மனித அவலமும்" என்பதே அந்த குறும் படம். சில செய்தித் தலைப்புக்கள் போதிய விளக்கம் அளிக்கவில்லை. சடலங்கள் ட்ரக்குகளில் அடுக்கப்பட்டு இனங்காணும் பொருட்டு இலக்கமிடப்படுகின்றன. அவைகள் பாரிய புதைகுழியில் அடக்கம் செய்யப்படுகின்றன. அருகில் மக்கள், உறவினர்கள் கதறியழுகின்றனர்.

ஏனைய பகுதிகளைப் போன்று அழிவை இப்பகுதி மக்களும் சந்தித்திருக்கின்றனர். ஏறக்குறைய 30 ஆயிரம் பேர் பலியாகியிருக்கின்றனர். ஆயினும் வடக்கு-கிழக்குப் பகுதிகள் முற்றிலும் ஏனைய பகுதிகளிலிருந்து வேறுபட்டுள்ளன. இப்பகுதி மக்கள் பல ஆண்டுகள் யுத்தத்தால் பாரிய அழிவைச் சந்தித்துள்ளனர். மயில்வாகனம் சின்னையா என்பவர் 1997ஆம் ஆண்டு யுத்தத்தினால் தனது ஒரு மகனை இழந்தார். தற்போது சுனாமி தாக்கத்தால் மனைவியையும், இன்னும் ஒரு மகனையும், மூன்று பேரப்பிள்ளைகளையும் இழந்துள்ளார்.

இந்தப் பிரதேசம் வேறு ஒரு நாடு போன்றதாகவே தெரிகிறது. நேரமும் ஏனைய அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வேறுபடுகிறது. தற்போது வெடிபொருள் பற்றியும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி வாழ் மக்கள் ஏனைய பகுதி வாழ் மக்களைவிட வறியவர்களானவர்கள். உலகத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டவர்கள்.

20 வருட காலமாக நடைபெற்ற யுத்தம் கடந்த மூன்று வருடத்துக்கு முன்பு உருவாக்கப்பட்ட சமாதானத்தினால் நிறுத்தப்பட்டது. தற்போது சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்பு புதுவிதமான யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆனால்இது ஆயுதங்களால் அல்ல சொற்களால் நடைபெறுகின்றது. அரசு அனைவரும் சமமாகவே பராமரிக்கப்படுகின்றனர் எனக் கூறுகின்றது. புலிகள் தமக்குப் போதிய அளவு உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டதிலிருந்து விடுதலைப் புலிகள் புனரமைப்பு, சுத்திகரிப்பு அதாவது பாதைகளை செப்பனிடல் போன்ற விடயங்களில் சரியான கட்டுக் கோப்புடன் செயற்படுகின்றார்கள். தென் பகுதிகளைப் போன்று இங்கு ஒருவரும் கொள்ளையிடுவதில்லை. உணவுப் பொருட்களை இடை மறித்துப் பறிப்பதில்லை.

அவர்கள் யுத்த நேரங்களில் எவ்வாறு பணியாற்றினார்களோ அதே போன்ற இந்த இயற்கை அனர்த்த நேரத்திலும் பணியாற்றுகின்றனர் என கிளி வைத்தியசாலை வைத்தியர் யூடி ரமேஸ் தெரிவிக்கின்றார். அவர்கள் ஒரு கட்டமைப்பை உருவாக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்க ஆங்காங்கு சிறு வைத்திய நிலையங்களை அமைத்தனர். மாவட்ட வைத்திய சாலைக்கு காயப்பட்டவர்களை அனுப்பும் போது அவர்களுக்கான முதலுதவிகளைச் செய்து காயங்களுக்கு மருந்து கட்டி அனுப்பி விடுகின்றனர். சம்பவம் நடைபெற்ற போது தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் புலிகளும் குழுக்களாகப் பிரிந்து கரையோரப் பகுதிகளுக்கு விரைந்தனர்.

பலர் காயப்பட்டனர் பலர் இறந்தனர் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்தனர். பாதிப்படைந்த எந்தவொரு சிறிய கிராம மக்களும் அகதி முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பாதிக்கப்பட்ட 12 வயது கபில் பிரான்சிஸ் கூறும் போது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போதே தனக்கு தேநீரும் பிஸ்கட்டுக்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

பலத்த காயப்பட்டவர்களின் கையில் சிவப்புநிறப்பட்டியும், நடுத்தர காயத்துக்கு மஞ்சல்நிறப்பட்டியும், சாதாரண காயத்துக்குப்பச்சை நிறப்பட்டியும் அணிவித்து அவர்கள் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பினர்.

டி சொய்சா என்பவர் கூறும்போது புலிகளுக்குப் போதிய வசதிகள் இல்லை என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான போதுமான மருத்துவ உடுபுடவை வசதிகள் உடனடியாகத் தேவை எனத் தான் குறித்துக்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடைபெற்ற 26ஆம் திகதிக்குப் பின்னர் விடுதலைப்புலிகளின் எந்தத் தனிப்பட்ட நடவடிக்கைகளும் நடைபெறவில்லை அவர்களின் வானொலி உப்புக் கூட்டுத்தாபனம், பனைவள நிலையம் ஆகியன சோககீதங்களை இசைத்தன. இந்த அனர்த்தத்துடன் மக்கள் அரசுக்கும் புலிகளுக்கு மிடையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என எண்ணுகின்றனர். மனித நடவடிக்கைக்கும் மேலாக இயற்கையின் நடவடிக்கை உயர்ந்து நிற்கின்றது. 2005ஆம் ஆண்டு சமாதானம் ஏற்படவேண்டும் என நாம் நினைக்கிறோம். என வைத்தியர் ஜெயக்குமார் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு தனது கட்டுரையில் ட்ரிப்யூன் என்ற வெளிநாட்டுப் பத்திரிகை எழுத்தாளரான கிம்பார்க்கர் தெரிவித்துள்ளார்.

---

## உளப் பாதிப்பிற்குள்ளான மக்களை இனங்கண்டு உதவ த.பு.கழகம் நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

சுனாமி கடல் அனர்த்தத்தால் உளவளம் பாதிப்புற்ற நிலையில் மக்கள் பலர் விரக்தியின் விளிம் பில் நின்று தவிக்கின்றனர். சிலர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். இச் சம்பவங்களை திருமலையில் இனங்கண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உளவளம் தேவைப்படுவோர் விபரத்தினை சேகரித்துவருகின்றது.

இத் தகவல் சேகரிப்பிற்காக கிராமம் கிராமமாகவும் நலன்புரி நிலையங்கள் ஊடாகவும், த.பு நிறுவனம் தனது 160இற்கு மேற்பட்ட தொண்டர்களை ஈடுபடுத்தியுள்ளது.

இந் நிலையில் திருமலை வீரன்சோலை குச்சவெளியைச் சேர்ந்த சச்சிதானந்தம் சசிக்குமார் என்ற 2வயது ஆண் குழந்தையின் தந்தை கடற் பூகம்பத்தில் தனது குழந்தை இறந்து விட்டதால் ஏற்பட்ட உளப் பாதிப்பினால் தன்னைத்தானே கூரிய ஆயுதங்களால் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

அத்துடன் தீமூட்டி எரித்து தற் கொலை செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டு மயிரிழையில் உயிர் தப்பி திருமலை தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என அவரது மனைவி சசிக்குமார் சசிப்பிரியா தெரிவித்துள்ளார்.

உளவளப் பாதிப்புற்று அல்லற்படும் மக்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய வழிகளில் உதவி செய்யத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துரித நடவடிக் கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றது. (சோ)

---

-ரோகிதவின் உறுப்புரிமை நீக்கத்திற்கெதிரான மனுவுக்கு-

## ஆட்சேப மனுவை தாக்கல் செய்ய உயர் நீதிமன்று ஐ.தே.கட்சிக்கு ஆணை

அமைச்சர் ரோகித போகொல்லாகமவை கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்கு எதிரான ஆட்சேப மனுவுக்கான நீதிமன்ற ஆணை நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது தம்மை கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்க முடிவெடுக்கப்பட்டமையானது, கட்சியின் அரசியலமைப்புக்கு எதிரான செயல் எனக்கூறி அதற்கு எதிராக ரத்து செய்யும் உத்தரவை பிறப்பிக்கவேண்டுமென ரோகித போகொல்லாகம கோரியிருந்தார் இதன்மீதே நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றம் ஆட்சேப மனுவை எதிர்வரும் 18 ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளைக் கேட்டுள்ளது. இதேவேளை இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறும் எனவும் நீதிமன்றம் திகதி குறித்துள்ளது.

---

## சுனாமிப் பேரழிவு நிவாரண நிதி முறையாக பயன்படுத்தப்படுவது பற்றி கண்காணிக்க குழு

### ஐ.நா.சபை அமைத்தது

(வோஷிங்டன்)

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுனாமி பேரழிவின் நிவாரணப்பணிக்காக வந்து சேரும் கோடிக்கணக்கான ரூபாய் நிதி முறையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க ஐ.நா.சபை தனியார் நிறுவனம் ஒன்றை பணிக்கு அமர்த்தியுள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா மனிதாபிமான விவகார ஒழுங்கமைப்பின் அதிகாரி கெல்லின் செனடி கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த பத்து ஆண்டுகளில் ஐ.நா நிதியைக் கண்காணிக்க வெளியிலிருந்து ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படுவது இதுவே முதல் தடவை என்றும் நிவாரணப் பணிகளுக்கென வழங்கப்படும் சுனாமி நிவாரண நிதியில் மோசடி நடைபெற்றால் அது பற்றிய குற்றச்சாட்டுக்கள் மற்றும் சுனாமி நிவாரண நிதியைத் தவறான காரியங்களுக்கு பயன்படுத்துவது வீண் விரையம் செய்யப்படுவது தொடர்பான புகார்களை இந்த அமைப்பு விசாரணை செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நிதியில் அரசு தான் தோன்றித்தனம்

## - சிறி.அரசு மீது எதிர்க்கட்சித்தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் நிவாரண நிதிகள் உரிய வகையில் செலவிடப்படுவதாகத் தெரியவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் இது விடயமாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நேரடியாக சந்தித்துப் பேசவுள்ளார். என்று அக்கட்சியின் மூத்த அங்கத்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க இதுபற்றித் தெரிவிக்கையில்; "சுனாமியால் பாதிக்கப்பட் மக்களுக்கென சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள போதும் அதில் 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை மட்டுமே நிவாரண நடவடிக்கைகளுக்கு ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சிதைவடைந்துள்ள நாட்டின் உட்கட்டுமானம் மற்றும் மனிதாபிமானத் தேவைகளுக்கும் வெளிநாடுகளால் அனுப்பப்படும் நிதியுடன் அரசு இவ்வாறு தான் தோன்றித்தனமாக விளையாடுகிறது. "நிவாரண நடவடிக்கைக்கென வெளிநாடுகள் வழங்கிய ஒவ்வொரு ரூபாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைகிறதா என்பதை அனைத்து மக்களும் உன்னிப்புடன் அவதானித்து உறுதிசெய்து கொள்ளவேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குவதன் மூலம் நிவாரண உதவிகளை நேர்சீராக வழங்கலாம் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்ட போதும் அது இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை" என்றார்.

# சுனாமியால் வடக்கு கிழக்கில் 12வைத்தியசாலைகள் முற்றாக அழிவு

## - சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமிப் பேரலையின் தாக்கத்தினால் வடக்குக் கிழக்கு பகுதியில் பன்னிரண்டு வைத்தியசாலைகள் அழிந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நான்கு அரசினர் வைத்தியசாலைகள், ஆறு கிராமிய சுகாதார் நிலையங்கள், இரண்டு கிராமிய வைத்தியசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. கல்முனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, மட்டக்களப்பு, கல்லாறு, திருகோணமலை, கிண்ணியா, வல்வெட்டித்துறை, முல்லைத்தீவு, நிந்தவூர், வைத்தியசாலைகள் உட்பட 12 வைத்தியசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளதென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மலேசிய தூதுவர் வவுனியா விஜயம்

இலங்கைக்கான மலேசிய நாட்டு தூதுவர் சேக் நசீரா குசைன் நேற்றுமுன்தினம் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியூதீனை சந்தித்துப் பேசியுள்ளார். அமைச்சரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு சுமார் 15 நிமிடங்கள் நீடித்தது.

இலங்கைத் தீவகத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேலும் துரிதப்படுத்தும் விதமாக மலேசியாவில் இருந்து மூன்று குழுக்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மலேசிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

# உலக சுகாதார மையத்தின் இரு அதிகாரிகள் நிமால்சிறிபால டி சில்வாவை சந்தித்துப் பேச்சு

உலக சுகாதார மையத்தின் தென்னாசிய பிரதிநிதிகளான வைத்திய கலாநிதி சாம்லீ மற்றும் கலாநிதி கான்டுன் ஆகியோர் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை சந்தித்து உரையாடினர். சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட காலிப்பிரதேசத்திற்கு விஜயம் செய்த அவர்கள் அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த உலக சுகாதார மையத்தின் பிரதிநிதியான வைத்திய கலாநிதி சாம்லி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு நாம் விஜயம் செய்யவில்லை. அங்கு ஏற்கனவே உலக சுகாதார மையத்தின் பிரதிநிதிகள் நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர். உலக சுகாதார நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் தற்சமயம் இலங்கையில் மீள்கட்டுமான பணிகளில் உலக சுகாதார மையம் பாரிய பங்கை வகிக்க எதிர்ப்பார்க்கிறது என்றார்.

# வடக்கிற்கான நிவாரணப்பொருட்கள் ராணுவ முகாம்களில் பதுக்கப்பட்டனவா?

சிறிலங்கா அரசின் தேசிய அனர்த்தத்திற்கான முகாமைத்துவ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கிற்கு 300 மெற்றிக் தொன் அரிசி, 300 மெற்றிக் தொன் சீனி மற்றும் 67 மெற்றிக் தொன் பருப்பு அனுப்பப்பட்டதாகவும், அவை வடக்கின் எந்த இடத்திற்குச் சென்றடைந்ததென்றோ விநியோகிக்கப்பட்டதென்றோ தகவல் பெற முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் வடக்கிற்கு அனுப்பப்பட்டதாக கொழும்பில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், அவை வடக்கின் எந்தப் பகுதியையயும் வந்தடையவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்று கொழும்பில் வெளியான ஆங்கிலப் பத்திரிகை இது குறித்துக் கேள்வியெழுப்பியுள்ளது. இத்தகைய நிவாரணப் பொருட்கள் ஏதாவதொரு ராணுவ அல்லது பொலிஸ் முகாமில் முடக்கப்பட்டிருக்கலாம் என்றும் அல்லது வேறு ஒரு பகுதி நோக்கி வாகனங்கள் திசை திருப்பப்பட்டிருக்கலாம் என்றும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

# அரசின் நிவாரண நடவடிக்கையில் மனித உரிமைமீறல் மனித உரிமைகள் ஆணைக்குழு கடும் கண்டனம்

(கொழும்பு)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளைப் பேணுவது குறித்தும் ஒரு பிரதேச மக்களை புறக்கணிப்பது குறித்தும் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு கடுமையாக எச்சரித்துள்ளது.

மிகவும் கடுமையான ஒரு எச்சரிக்கை என்று கருதப்படும் இந்த அறிவிப்பின்படி, மனித உரிமைகளுக்கான அமைப்பு The Human Rights Commission (HRC) வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், மக்களைப் பாதுகாபபது மக்களால் தெரிவான ஒரு அரசின் கடமை என்றும், முகாமில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கும், சரிசமமாக நாட்டிலுள்ள அனைத்துப் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப் படவும் சிறிலங்கா அரசு ஆவண செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளது.

வடக்கிற்கும் கிழக்கிற்கும் தங்குதடையின்றி வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் சென்று பார்வையிட சிறிலங்கா அரசு அனுமதி வழங்காது இடையூறுகள் செய்வதும், தடைகளை விதிப்பதும் அநீதியான செயற்பாடு என்று கடிந்துகொள்ளும் இந்த அறிக்கை, மனித உரிமையை முழுமையாக மதித்து நாட்டின் அனைத்து மக்களையும் சரிசமமாக நடாத்த அரசு தவறியுள்ளதைச் சுட்டிக்காட்டி தனது வன்மையான கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது. பிரேதங்களை அப்புறப்படுத்துவது, அடையாளம் காண்பது, உறவினரிடம் சடலங்களை ஒப்படைப்பது போன்ற விடயங்களிலும், நலன்புரி நிலையங்களில் கொள்ளையடித்தல், மிரட்டல், பாலியல் வல்லுறவு போன்றன முற்றாக இல்லாது தடுப்பது என பல விடயங்கள் மனித உரிமைப் பாதுகாப்பின் கீழ் வருகின்றன. இவற்றை ஒரு நாட்டின் அரசு வழங்கத் தவறினால், அல்லது நாட்டின் ஒரு பகுதிக்கு இவற்றை வழங்க மறுத்தால், அது மனித உரிமை மீறலாகவே கொள்ளப்படும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. பாடசாலைப் பிள்ளைகள் மீளவும் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஆவண செய்ய அரசு முன்வரவேண்டும் என்றும், அதிலும் பாரபட்சம் காட்டப்படுவது வேதனைக்குரியது என்றும் குறிப்பிடும் அவ்வறிக்கை, மனவுளைச்சலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனை மற்றும் மருத்துவ வசதிகளையும் வழங்க வேண்டுமென்றும், நாட்டின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் இந்த வசதி வழங்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இத்தகைய அனைத்து முன்னெடுப்புக்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமுகமாக, இந்த மனித உரிமை அமைப்பு, உடனடியாக ஒரு உத்தியோக பூர்வ பிரத்தியேக கந்தோர் ஒன்றை உருவாக்கி செயற்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்ரர்போல்பொதுச்செயலர் இலங்கைக்கு வருகை

சர்வதேச பொலிஸ் மையமான இன்ரர்போலின் பொதுச் செயலர் ரொனல் நொபெல் நேற்று முன்தினம் நண்பகல் 12.15க்கு இலங்கைக்கு வருகை தந்தார். அவருடன் குழு ஒன்றும் இலங்கையை வந்தடைந்தது. இதேவேளை ஸ்பானிய வெளியுறவு அமைச்சர் மிகேல் எஜே

நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இந்த நிலையில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி நிவாரணங்களை தாங்கி இதுவரைக்கும் சுமார் 192 வானூர்திகள் கட்டுநாயக்கவுக்கு வந்து சென்றுள்ளன. இதில் யுத்த உபகரணங்களுடன் வருகை தந்த 22 அமெரிக்க வானூர்திகளும் அடங்கும் என கட்டுநாயக்க வானூர்தி தள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஈழநாதம் மக்கள் நாளேட்டின்

## ஆண்டு மலருக்கான ஆக்கங்கள்

ஈழநாதம் மக்கள் நாளேடு எதிர்வரும் 19.02.2005 அன்று 16 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதனை முன்னிட்டு வெளிவரவுள்ள ஆண்டு மலரில் பிரசுரிப்பதற்கு

- சிறுகதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்

என்பன ஆக்ககர்த்தாக்களிடமிருந்து கோரப்படுகின்றன

ஆக்கங்கள் சமூக,அரசியல்,பொருளாதார,விஞ்ஞானத் துறைகள் சார்ந்தவையாகப் பரந்துபட்ட தளத்தில் ஆக்கப்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆக்கங்களை 30.01.2005 இற்கு முன் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் கிடைக்கக் கூடியவாறு நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.

அனுப்புபவர்கள் தமது தெளிவான அஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

ஆசிரியர்,
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# காஷ்மீர் மாநிலத்தில் நீர் மின் திட்டம்

# வலுவாக எதிர்க்கிறது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்) .

**ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்தியா மேற்கொண்டுள்ள பாக்லியார் நீர்மின் திட்டம் குறித்துக் கடுமையாக எதிர்க்கும் பாகிஸ்தான் இரு நாடுகளுக்குமிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை நடுவராக இருந்து தீர்த்து வைக்குமாறு உலக வங்கியிடம் கோர முடிவு செய்துள்ளது.**

ஜம்மு காஷ்மீரிலிருந்து ஆறு நதிகள் பாகிஸ்தான் நோக்கிப் பாய்கின்றன. இவை மீது நீர் மின் நிலையம் அமைப்பதில்தான் பிரச்சினை 1960 ஆம் ஆண்டு இப்பிரச்சினையில் ஓர் உடன்பாடு ஏற்பட உலக வங்கி உதவியது செனாப் நதி மீது 450 மெகாவாட் நீர் மின் நிலையம் அமைக்க இந்தியா முனைந்துள்ளது. இதை பாகிஸ்தான் எதிர்க்கிறது. இப்பிரச்சினை தொடர்பாக கடந்த வாரம் டில்லியில் 3 நாட்கள் இரு தரப்பு அதிகாரிகள் இடையே பேச்சு நடந்தது. ஆனால் பலன் இல்லை.

இதன்பின் பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அலி கடந்த திங்கட்கிழமை இரவு உயர் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டினார். பிரச்சினையை உலக வங்கியிடம் எடுத்துச் செல்ல தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உரிய துறைகளுக்குஉத்தரவு பிறப்பித்துள்ளதாக பாகிஸ்தான். பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.



ரேபரேலி தொகுதியில் 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சோனியாகாந்தி தொகுதி மக்கள் தரும் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட காட்சி



விஜயேந்திரரைக் கைது செய்ததைக் கண்டித்து காஞ்சிபுரத்தில் சங்கரமடம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது.

# நாகையில் தொழிற்பயிற்சி மையம்

# அமெரிக்க நிறுவனம் அமைக்கிறது

(வோஷிங்டன்)

ஆட்களைத் தேர்வு செய்யும் அமெரிக்காவின் 'மேன்பவர்' நிறுவனம் தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகபட்டினம் பகுதியில் தொழிற் கல்வி பயிற்சி மையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காகஅந்த நிறுவனம் ரூ.4.5 கோடி நிதியுதவி தரவுள்ளது.

இது குறித்து 'மேன்பவர்' நிறுவனத்தலைவர் ஜெப்ரி ஜோரீஸ் கூறியதாவது; சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தியாவுக்கு எந்த வகையில் உதவி செய்யவேண்டும் என்பது குறித்து எங்கள் நிறுவனம் சார்பில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. பாதிப்பில் இருந்து மீண்டு வர முயற்சி செய்பவர்களுக்கு நீண்ட காலத்திற்கு உதவி செய்யும் வகையில் எங்கள் முயற்சி இருக்க வேண்டும் என்று அப்போது முடிவு செய்யப்பட்டது. வேலை இழந்து தவிப்பவர்கள் குடும்பத்துக்கே வருமானம் அளித்து வந்தவரை இழந்து தவிப்பவர்கள், பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள போராடுபவர்களுக்கு உதவி செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக 'மேன்பவர்' நிறுவனம் சார்பில் இந்தியாவில் ரூ.4.5 கோடி செலவில் தொழிற் கல்வி பயிற்சி மையம் தொடங்கப் படவுள்ளது.

இதைத்தொடர்ந்து தமிழக அரசுடன் விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகபட்டினம் மாவட்டத்தில் இந்த பயிற்சி மையம் அமைக்கப்படும் இவ்வாறு ஜெப்ரிஜோரீஸ் கூறினார்.

# பள்ளிப்படிப்பைப் பாதியில் விடுவோர் எண்ணிக்கை குறைகிறது

## - இந்.திட்டக்குழுவின் அறிக்கை தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு விலகும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், மேற்குவங்கம், பீகார் உள்ளிட்ட சில மாநிலங்களில் இந்த அளவு தொடர்ந்து அதிகமாகவே காணப்படுகின்றது. பள்ளிப் படிப்பை பாதியிலேயே கைவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை குறித்த திட்ட கமிஷனின் ஆய்வறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதில் பல முக்கிய புள்ளி விபரங்கள் தெரிய வந்துள்ளன.

பள்ளிப்படிப்பை பாதியிலேயே கைவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை கடந்த 1960-61 ஆம் ஆண்டில் 64.9 சதவீதமாக இருந்தது. 2002-03 ஆம் ஆண்டில் 34.9 சதவீதமாகக் குறைந்துள்ளது. பல்வேறு மாநிலங்களில் பள்ளி மாணவர்களுக்காக சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதால் இந்த சாதனை நிகழ்ந்துள்ளது. எனினும் சில மாநிலங்களில் இதன் அளவு இன்னமும் அதிகமாகவே உள்ளது. பிரிக்கப்படாத பீகார் மாநிலம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் சேர்ந்து 62 சதவீதமும் அசாமில் 61 சதவீதமும், ராஜஸ்தானில் 57 சதவீதமும் ஆந்திராவில் 57 சதவீதமும் பள்ளிப் படிப்பை பாதியில் கைவிடும் குழந்தைகள் எண்ணிக்கையுள்ளது.

இதேபோல் கற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 1991 ஆம் ஆண்டில் இருந்து 2001 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகளில் 52 சதவீதத்தில் இருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதன் அளவை வரும் 2007 ஆம் ஆண்டுக்குள் 74.83 சதவீதமாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# விஜயேந்திரரின் மனு குறித்து நீதிமன்றில் இன்று விசாரணை

(காஞ்சிபுரம்)

இளைய மடாதிபதி விஜயேந்திரர் பிணை கேட்டு செங்கல்பட்டு செசன்சு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது இன்று விசாரணை நடைபெறும். சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சிஇளைய மடாதிபதி விஜயேந்திரர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு சென்னை ஜெயிலில் அடைக்கப்பட்டார்.

விஜயேந்திரரை பிணையில் விடுவிக்கும்படி செங்கல்பட்டு செசன்சு நீதிமன்றில் நேற்று முன்தினம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மூத்த வக்கீல் லட்சுமண ரெட்டியார் இந்த மனுத் தாக்கல் செய்தார், விஜயேந்திரர் தம்பி ரகு சார்பிலும் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த பிணை மனுக்கள் மீது இன்று விசாரணை நடக்கிறது. சங்கர மடத்தின் கணக்காளர் விசுவநாத அய்யரின் பிணை மனு காஞ்சிபுரம் நீதிமன்றில் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது.

# விவசாயிகளுக்கு கூடுதல் சலுகை வேண்டும்

# இந்திய நீதியமைச்சரிடம் கோரிக்கை

2005-6ஆம் ஆண்டிற்கான மத்திய பொது வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை நிதிமந்திரி ப.சிதம்பரம் நேற்று முன்தினம் தொடங்கினார்.இதன் முதற் கட்டமாக அவர் விவசாய சங்கப் பிரதிநிதிகளையும், பண்ணையாளர்களையும் சந்தித்தார். விவசாயத்துறைக்கு கூடுதல் சலுகைகளை அறிவிக்க வேண்டும் என்று நிதி மந்திரியிடம் வற்புறுத்தப்பட்டது. விவசாயத் துறை நிபுணர்களும் நிதி மந்திரியைச் சந்தித்தனர். உணவு தானியங்களுக்கு குறைந்த பட்ச விலை அளிப்பதற்குப் பதிலாக மாற்றுத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் படி விவசாயிகளுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும் படி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். மழை நீர் சேமிப்புக் குட்டைகள் அமைக்க கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்றும் மத்திய அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் நாட்களை அதிகரிக்க வேண்டும் என்றும் நிதி மந்திரியிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

# டில்லியில் கடும் பனிமூட்டம்

# ரயில்கள்,விமானங்கள் தாமதம்

(புதுடில்லி)

டில்லியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பனி மூட்டத்தின் காரணமாக ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

டில்லியில் நேற்று வெப்ப நிலையின் அளவு இயல்பான நிலையை ஒட்டியே இருந்தது ஆனாலும் பனிமூட்டம் குறையவில்லை நேற்றுக்காலை 5 மணியிலிருந்து 8 மணிவரை ஏற்பட்ட பனிமூட்டத்தின் காரணமாக ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.டில்லியில் தரையிறங்க வேண்டிய விமானம் ஒன்று ஜெய்ப்பூருக்கு திருப்பி விடப்பட்டது. எட்டு ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. நான்கு ரயில்கள் புறப்படும் மற்றும் வந்து சேரும் நேரங்களும் மாற்றி அமைக்கப்பட்டன. டில்லியிலிருந்து மும்பை செல்லும் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் 50 நிமிடங்களும் டில்லியிலிருந்து கவுரா செல்லும் பூர்வா எக்ஸ்பிரஸ் ரயில் 45 நிமிடங்களும் தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

# அந்தமானில் மீண்டும் கடல்பெருக்கு அபாயம்

(புதுடில்லி)

அந்தமான் தீவில் புதிதாக கடற்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதால் கடலோரப் பகுதி மக்கள் வெளியேறியுள்ளனர். வானிலை ஆராய்ச்சி நிலையம் விடுத்திருந்த முன் எச்சரிக்கை அறிவித்தலையடுத்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கடல் மட்டம் இருந்ததைவிட 2.35 மீற்றர் உயர்ந்துள்ளது. மேலும் கடல் மட்டம் உயரலாம் என்ற அச்சத்தில் மக்கள் இடம்பெயர்ந்து உயரமான பகுதிகளுக்குச் சென்றுள்ளனர்.



திருச்சி விமான நிலையத்தில் தமிழக கவர்னர் பர்னலாவிற்கு திருச்சி மாநகராட்சி மேயர் சாருபாலா தொண்டைமான், கலெக்டர் பாண்டியன், பொலிஸ் கமிஷனர் சுனீல் குமார் சிங் ஆகியோர் வரவேற்புக் கொடுத்தபோது.

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் தமிழீழ மாணவர் அமைப்பும் இணைந்து நடாத்தும் இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

மேற்படி கணினிப் பயிற்சி நிலையத்தில் O/L(2004) மாணவர்களிற்கான விரிவுரைகள் 16.01.2005 ஆம் திகதி மாலை (03.00) மணிக்கு ஆரம்பிக்கும் என்பதை அறியத் தருகிறோம்.


இராமநாதபுரம்
(5550) இலவசக் கணினிப் பயிற்சி நிலையம்.

# தென்னாபிரிக்கா- இங்கிலாந்து நான்காவது டெஸ்ட் இன்று!



(ஜெகனஸ்பாக்)

தென்னாபிரிக்கா- இங்கிலாந்து நாடுகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி இன்று ஜெகனஸ்பாக்கில் ஆரம்பமாகவுள்ளது. ஐந்து போட்டிகளைக் கொண்ட இத் தொடரில்1-1 என்ற நிலையில் அணிகள் உள்ளதோடு இன்று ஆரம்பமாகும் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அதாவது தொடர் வெற்றிக்கான சந்தர்ப்பம் இரு அணிகளுக்கும் இருக்குமானால் போட்டி விறுவிறுப்பாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# அவுஸ்.இல் முக்கோணத் தொடர் நாளை ஆரம்பமாகிறது

## முதல் போட்டியில் அவுஸ். மேற்கிந்தியத்தீவுகள் மோதும்

மெல்பேர்ன், அவுஸ்திரேலியா,பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில்நாளை தொடங்குகிறது. ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா மூன்று முறை மோதவுள்ளன. புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும்.நாளை ஆரம்பமாகும் போட்டியில் அவுஸ். அணியை எதிர்த்து மேற்கிந்தியத்தீவுகள் அணி மோதும்.





# அவுஸ்திரேலியாவில் மீண்டும் போட்டியில் பங்குபற்றுவேன்!

## முத்தையா முரளிதரன்



இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் மீண்டும் தான் அவுஸ்திரேலியாவில் விளையாடிச் செல்வேன் எனத் தெரிவித்துள்ளார்.

முரளிதரன் வீசும் தூஷ்ரா வகைப் பந்து வீச்சுக் குறித்து அவுஸ்திரேலியாவில் எழுப்பப் பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து முரளிதரன் அவுஸ்திரேலியாவில் விளையாடுவதில்லை என அறிவித்துள்ளார். அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹேவார்ட் கூட முரளிதரன் பந்தை எறிவதாகக் கூறியிருந்தார். இதற்கிடையில் சுனாமி நிவாரணத்திற்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கடந்த திங்கட்கிழமை மெல்பேர்னில் நடந்தது. இதில் ஆசிய லெபன் அணிக்காக முரளிதரன் விளையாடினார். அப்போது வீரர்கள் அறிமுக நிகழ்ச்சியில் அவுஸ்திரேலியப் பிரதமர் ஹோவார்ட், முரளிதரனை வரவேற்றார்.

போட்டி முடிந்த பிறகு நடந்த விருந்து நிகழ்ச்சியிலும் அவுஸ்திரேலியப் பிரதமருடன் நீண்ட நேரம் அவர் பேசினார். சுனாமி நிவாரணத்துக்காக இந்த கிரிக்கெட் போட்டி மூலம் இந்தியா ரூ.50 கோடி திரட்டப்பட்டது.

சுனாமி நிவாரணத்துக்கு அவுஸ்திரேலியா பெரிதும் உதவியதால் முரளிதரன் தனது முடிவை மாற்றிக்கொண்டுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு மீண்டும் செல்வேன் என்று அறிவித்துள்ளார். இது தொடர்பாக அந்நாட்டுப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

தனிப்பட்ட காரணங்களுக்காக அவுஸ்திரேலியாவுக்குச் செல்லமாட்டேன் என்று முன்பு கூறினேன். தற்போது சுனாமி நிவாரணத்துக்காக அவுஸ்திரேலியா ரசிகர்கள் பெரிதும் உதவி இருக்கிறார். இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக அவர்கள் கோடிக் கணக்கான பணத்தைத் திரட்டி இருக்கிறார்கள். இதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவுஸ்திரேலியாவுக்கு நான் மீண்டும் விளையாட வருவேன் எனத் தெரிவித்துள்ளார்.

## -சுனாமி நிதியுதவி கிரிக்கெட் போட்டி-

# நியூசிலாந்து அணியுடன் உலக கிரிக்கெட் அணி மோதும்





சுனாமியால் பாதிகப்பட்டவர்களுக்கு நிதி திரட்டும் போட்டியொன்றை நடத்த நியூசிலாந்து கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இப்போட்டி நியூசிலாந்து அணிக்கும் உலக அணிக்கும் இடையில் நடைபெறும்.

உலக அணிக்கு அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோன் தலைமை வகிப்பார். போட்டிகள் வரும் 22,24,26 ஆகிய தினங்களில் நியூசிலாந்தில் நடைபெறும்.

உலக அரங்கில் ஓய்வுபெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் கிரகம் ஹிக், தென்னாபிரிக்காவின் ஜொண்டிறொடஸ் அன்டி பிளவர்,ஹித்ஸ்ரிக், ஆகியோரும் உலக அணியில் இடம்பெறுகின்றனர். கிரைச்சர்ச்,வெலிங்டன், ஹமில்டன், ஆகிய இடங்களில் நடைபெறும் இப்போட்டிகள் சுனாமி அலையால் பாதிப்படைந்தவர்களுக்கு நிதியுதவி வழங்கவே நடத்தப்படுகின்றதென அன்டி பிச்சல் தெரிவித்துள்ளார்.


உலக அணியில் இந்திய வீரர்கள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## குளிர்பானம் வழங்கிய சச்சின்



முழங்கையில் காயம் காரணமாக ஓய்வு எடுக்கும்படி மருத்துவர்கள் ஆலோசனை கூறியிருப்பினும் சுனாமி போட்டியில் பங்கேற்பேன், ஆனால் விளையாடமாட்டேன் என்று இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் கூறியிருந்தார். அதன்படி சிறிதுநேரம் களத்தடுப்புச் செய்தார். மேலும் வீரர்களுக்கு குளிர்பாணங்களைக் கொண்டு சென்றுகொடுத்து தனது பங்களிப்பைச் செய்தார். அவுஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் வோதனது பங்குக்கு சிறிது நேரம் களத்தடுப்புச் செய்தார்.

# அவுஸ்.ஏ அணியை பாக்.அணி வென்றது!



(அடிலேட்)

அவுஸ்திரேலிய ஏ அணியுடனான பயிற்சி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அப்துல் ரசாக் ஆட்டமிழக்காது பெற்ற ஓட்டங்கள் அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுத்தந்தது.


அடிலேட்டில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதல் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 279 ஓட்டங்களைப் பெற்றது. ரசாக் ஆட்டமிழக்காது ஆறு சிக்சர்களுடன் 61 பந்துகளில் 89 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் அவுஸ்திரேலிய வீரர் பிராட்ஹேடன் பெற்ற சதத்தினால் அந்த இலக்கு பாகிஸ்தான் அணிக்கு போதுமானதா என்ற சந்தேகத்தை இடையில் எழுப்பியது.

அவுஸ்திரேலியா ஒரு கட்டத்தில் பிரட்ஹேடனின் 128 ஓட்டங்களுடன் 4 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும் நவிட்உல் ஹசனின் ப்ந்து வீச்சில் மிகுதி 26 ஓட்டங்களைப் பெறமுன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 266 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.கடந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் பங்கேற்காத இன்சமாம் உல்ஹக் அணியை வழிநடத்தினார்.

துடுப்பாட்டத்தில் மட்டுமன்றி பந்துவீச்சிலும் (2/45) ரசாக் சிறப்பாக ஆடினார்.

சல்மன்பட் 15 ஓட்டங்களையும் இன்சமாம் 10,யுகானா 5 என்ற ஓட்ட எண்ணிக்கையுடன் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலியாவின் பிராட் ஹடினின் 4 ஆவது சதம் இதுவாகும்.




# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரு டெஸ்ட் போட்டி

## புச்சருக்குப் பதிலாக இயன்பெல் இணைப்பு

தென்னாபிரிக்காவுடனான மிகுதி இரு டெஸ்ட் போட்டிகளிலும் பங்கேற்கும் இங்கிலாந்து அணியில் மார்க் புச்சருக்குப் பதிலாக ஒருநாள் அணி வீரரான இயன்பெல் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார். மார்க் புச்சர் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நாடு திரும்ப வேண்டியுள்ளது.

தான் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பாக பெல் கூறும்போது சிம்பாப்வேயுடனான போட்டிகளின் பின்னர்தான் அணியில் இடம் பிடிக்க தருணம் பார்த்திருந்ததாகவும் தனது திறனை வெளிக்காட்ட எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான ஒரு டெஸ்ட் போட்டியில் இவர் பங்கு பற்றி முதல் இன்னிங்சில் 70 ஓட்டங்களைப்பெற்றார் அப்போதும் அவர் கிரகம் தோப்பின் இடத்தை நிரப்பு முகமாக அணியில் சேர்ந்தார். தோப் ஓவர் மைதானத்தில் அன்று காயமடைந்து ஓய்விலிருந்தார்.

புச்சர் காயப்பட்டுள்ளமைக்குவருத்தம் தெரிவிக்கும் இவர் தனது திறமையை வெளிக்கொணர இது தகுந்த தருணம் என்றார்.

கேப்டவுனில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது டெல்ட் போட்டியில் புச்சருக்குப் பதிலாக றொபர்ட்கி சேர்க்கப்பட்டார். அவரும் கென்ட் அணி வீரர் என்றதால் பெல் ஆறுதல் அடைந்ததாகக் கூறுகிறார். அவர் பங்கு பற்றினாலும் திறமையை நிருபித்தார். அது போன்று தனக்கு முடிந்த வகையில் தானும் அணியின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலியாவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹெய்டன் ஓய்வில்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹெய்டன் நடைபெறவுள்ள முத்தரப்பு கிரிக்கெட் போட்டித்தொடரில் முதல் 2 மோதல்களில் பங்கேற்கமாட்டார். கடந்த சில மாதங்களாக ஹெய்டன் சரியான முறையில் ஆடவில்லை. இதனால் அவருக்கு சிறிய ஓய்வு கொடுக்கப்போவதாகத் தேர்வுக்குழுத் தலைவர் ஹான்ஸ் தெரிவித்தார்.

# கண்காட்சி டெனிஸ் பிரபல வீரர்கள் வெற்றி பெற்றனர்

கூயங்கில் நடைபெற்ற கண்காட்சி டெனிஸ் போட்டியில் டிம்ஹென்மன் ஆர்ஜென்டீனாவின் டேவிட் நல்பாண்டியனை 6-1, 7-5 என்ற கணக்கில் வென்றுள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த இவர் நாளை நடைபெறும் அவுஸ்திரேலிய ஓபன் போட்டிக்காக நடைபெறும் பயிற்சிப் போட்டியில் றோஜர் பெடரரைச் சந்திப்பார்.

இந்தக் கண்காட்சிப் போட்டிகளில் றோஜர் பெடரர் கஸ்டன் கௌடியாவை 5-7,6-1,6-4 என்ற கணக்கிலும், அன்ரு அகாஷி ஒலிம்பிக் சம்பியன் நிக்களஸ் மசாவை 6-1,7-6,7-4 என்ற கணக்கிலும் வென்றனர். அன்ருறொடிக் ஜவன ஜுபிசிக்கை 6-1,6-4 என்ற கணக்கில் வென்றார்.


# 12வருடங்களின் பின் களமிறங்கும் ஜெப்வில்சன்

சுமார் 12 வருடங்களாக கிரிக்கட்டிலிருந்து விலகியிருந்த நியூசிலாந்து வீரர் ஜெப்வில்சன் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். இவர் வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் உலக அணியுடனான போட்டியில் நியூசிலாந்து அணியில் இடம்பிடிக்கிறார் உலக அணிக்கும் நியூசிலாந்து,அணிக்கும் மூன்று போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. வில்சன் 1993ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் வெற்றி ஓட்டமான 44 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். அதன் பின்னர் இவர் றக்பி போட்டிகளில் பங்கேற்றார் எனினும் 2002ஆம் ஆண்டு அந்த அணியிலிருந்தும் விலகினார். இவர் காயம் காரணமாக அணியில் இடம்பெறாது இருக்கும் இயன்பட்லரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

# 2 ஆவது சுனாமி நலநிதி கிரிக்கெட் குறித்து பி.சி.சி.ஐ விரைவில் முடிவு

பாகிஸ்தான் அணியின் இந்திய சுற்றுப்பயணம் மற்றும் சுனாமி நலநிதிக்கான 2 ஆவது ஒரு நாள் போட்டி குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விரைவில் முடிவு எடுக்கவிருக்கிறது.பி.சி.சி.ஐயின் பொதுக்குழுக் கூட்டம் (ஏ.ஜி.எம்) விரைவில் கூடவிருக்கிறது. அக்கூட்டத்தின் போது மேற்படி இரண்டு பிரச்சினைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. பி.சி.சி.ஐ பொதுக் குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு உச்சநீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு அளித்ததற்கு வாரியம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

## சிந்தனைக்கு



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சிவப்பு சட்டையைத் தவிர...!

ஜே.வி.பி. இன்று ஒன்றில் மட்டுமே உறுதியான கொள்கை/நிலைப்பாடு உடையதாகவுள்ளது. அதாவது, விடுதலைப்புலிகளின் ஊடாகச் சர்வதேச உதவிகள் எவையும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படக்கூடாது/சென்றடையக்கூடாது. வேறு விதமாகக் கூறுவதனால், தமிழர் பகுதியில் யுத்தத்தினாலோ அன்றிச் சுனாமி பேரனர்த்தத்தினாலோ ஏற்பட்ட இழப்பிற்கும், அழிவுகளுக்குமான நிவாரணம், புனரமைப்பிற்கான நிதி உதவிகள் வழங்கப்படுவது அவசியமானதொன்றல்ல என்பது மட்டுமே.

ஜே.வி.பி. தன்னை ஒரு இடதுசாரி அமைப்பு எனக் கூறிக் கொண்டாலும் அதனிடம் இன்று சிவப்புச் சட்டையைத்தவிர வேறு எதுவும் இடதுசாரிகள் எனக் கூறிக் கொள்வதற்கு இல்லை. ஆனால், இது சுனாமி பேரலைகளின் தாக்கத்தின் பின்னர் ஏற்பட்டதொன்றல்ல. தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற முடிவிற்கு ஜே.வி.பி. வந்தபோதே மேற்கொள்ளப்பட்டு விட்டதொன்றாகும்.

அதாவது, சிறிலங்காவில் தேர்தல் மூலம் பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒரே மார்க்கமாக கடந்த கால அரசியல்வாதிகள் காட்டிச் சென்ற ஒரே வழி இனவாதத்தைக் கையில் தூக்கிபிடித்துக் கொள்வதுதான். இந்த வகையிலேயே ஜே.வி.பி.யும், இனவாதத்தைக் கையில் தூக்கிப்பிடித்துக் கொண்டது. இதன் பிரதிபலனாக கடந்த தேர்தலில் 39 பாராளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றிக் கொண்டது.

ஆகையினால், ஜே.வி.பியின் கொள்கை மாற்றம் என்பது தற்பொழுது ஏற்பட்டதல்ல. ஆனால், தற்பொழுது சுட்டிக்காட்ட விளைவது அவர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தமது சுயரூபத்தை வெளிக்காட்டி நிற்கின்றமையே ஆகும். அதாவது, ஜே.வி.பி. தேர்தலில் வெற்றிபெற்ற பின்னும் போட்ட கூச்சல்களை தற்பொழுது மறந்து போனமையைச் சுட்டிக்காட்டுவதற்கும், ஏன் மறக்கப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்துவதற்குமேயாகும்.

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் மூலமாக 45,000 கோடி ரூபாய்களை சிறிலங்கா அரசிற்கான நிதியுதவியாக வழங்க உலக நாடுகள் குறிப்பாக, ஜப்பான் மற்றும் மேற்கு நாடுகள் முன்வந்த போது ஜே.வி.பி.யானது அதனைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில், இந்நிதியுதவி கிடைக்கப்பெற வேண்டுமானால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். நிதியுதவியின் ஒரு பகுதி வடக்கு-கிழக்கில் யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதனாலேயே ஆகும்.

இதேபோன்றே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் குறித்துக் கடும் விமர்சனத்தை வெளியிட்டு வந்த ஜே.வி.பி. நோர்வேயை ஏற்பாட்டாளராகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளையும் அது தீவிரமாக எதிர்த்தது. அமெரிக்க இராணுவம் வேறு நாடுகளில் இறக்கப்பட்டதைக்கூட ஜே.வி.பி. கடுமையாக விமர்சித்தது. அந்நாடுகளின் தேசியக் கொடிகளை எரித்ததோடு, வெள்ளைத் தோல்காரர்களே வெளியேறு என்ற கோசத்தையும் முன்வைத்தது.

ஏனெனில், அப்போது மேற்குலக நாடுகள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திவந்தமை மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நிலைப்பாட்டிற்கும் ஓரளவு ஆதரவு கொண்டவையாகவுமிருந்தன. அவர்களின இத்தகைய நிலைப்பாடே ஜே.வி.பி.யினருக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதுவே மேற்குலகத்தவர் மீது ஜே.வி.பி. அன்று கடும் சீற்றத்தை வெளிப்படுத்தக் காரணமாக இருந்தது.

ஆனால், சுனாமி பேரனர்த்தத்தின் பின்னர் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் எவருமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்தோ அன்றி வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் குறித்தோ பேசவில்லை நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை. பெரும் தொகை நிதி வழங்குவது பற்றியும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றியுமே பேசுகின்றனர். இந்தவகையில், பெரும் வங்குரோத்து நிலையில் இருந்த அரசாங்கத்திற்கு சுனாமி அனர்த்தம் பெரிதும் கைகொடுத்துள்ளதெனலாம்.

இந் நிலையில்தான், எந்த ராணுவம் வந்தால் என்ன? என்ன நிறம் வந்தால் என்ன? உதவியைத் தந்துவிட்டு நீங்கள் நிலை கொள்ளுங்கள என்பது போன்று ஜே.வி.பி. நடந்துகொண்டுள்ளது. கடந்த காலத்தில் பேசிய ஏகாதிபத்தியம்; நிதியுதவி தேவையில்லை, சொந்தக்காலில் நிற்போம் என்ற நிலைப்பாடுகள் எல்லாம் மறந்துபோனவையாக வேறு யாராலோ பேசப்பட்டவை ஆகிவிட்டன.

ஆனால், ஜே.வி.பி. இன்னும் கைவிடாததொன்றாக இருப்பது தம்மைப பௌத்தத்தின் பாதுகாவலனாக காட்டிக் கொள்வதும், தமிழ் மக்களின், விடுதலைப்புலிகளின் விரோதிகளாக தம்மை வெளிப்படுத்துவதுமே ஆகும். இதில் பௌத்தத்தின் காவலனாகத் தம்மை வெளிப்படுத்த முனைந்ததே மெல்போர்னில் நடந்த கிரிக்கெட் போட்டி மூலம் திரட்டப்பட்ட நிதியை வேர்ட்; விசன் என்னும் சமயம் சார்ந்த அமைப்பு ஒன்றின் மூலம் செலவீடு செய்ய முற்படுவதற்கு எதிராக ஜே.வி.பி. கிளப்பியுள்ள சர்சையாகும்.

அடுத்ததாக, தமிழர் தாயகப் பகுதிக்கு நிவாரணப் பொருட்கள், உதவிகள் என்பன சென்றடைவதைத் தடுக்கும் முகமாகப் போடும் பெரும் கூச்சலாகும். அதாவது, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூலம் உதவிகள் வழங்கப்படக்கூடாது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு எவரும் நன்கொடை அளிக்கக்கூடாது என்ற கூச்சலாகும். இந்த வகையில், இன்று ஜே.வி.பி.யிடம் எஞ்சியிருப்பது தமிழர் இன விரோதக் கொள்கையைத் தவிர வேறு எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. இது ஜே.வி.பி.க்கு நன்மை பயக்குமோ இல்லையோ நாட்டிற்கு எந்த வகையிலும் நன்மை பயக்கமாட்டாது.

## திருமலையில் பாதிக்கப்பட்ட மக்களை சிங்கப்பூர் கல்வி அமைச்சர் பார்வையிட்டார்

சிங்கப்பூர் கல்வி அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் அகதிகளைப் பார்வையிட்டு ஆறுதல்கூறி, அவர்களின் தேவைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்தார். குச்சவெளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நிலாவெளி பள்ளிவாசலில் தங்கியுள்ள முஸ்லிம் அகதிகளை அமைச்சர் முதலில் பார்வையிட்டார். அகதிக் குடும்பங்களுக்குத் தேவையான சமையல்ப் பாத்திரங்களை சிங்கப்பூர் அரசாங்கத்தின் சார்பில் அவர் பள்ளிவாசல் நலன்புரி முகாம் பொறுப்பாளரிடம் கையளிததார். பின்னர் அமைச்சர் கூடாரங்களில் தங்கியுள்ள அகதிக்குடும்பங்களைச் சந்தித்து உரையாடினார். நிலாவெளி பள்ளிவாசல் முகாமில் சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்தின் வைத்திய குழுவினர் ஆற்றும வைத்திய சேவையையும் அவர் பார்வையிட்டார்.

பின்னர் சுனாமியினால் அழிக்கப்பட்ட வேலூர்க்கிராமத்தைப் பார்வையிட்டார். அதன் பின்னர் அடம்போடைப் பகுதிக்குச் சென்று அங்கு கூடாரமடித்துத் தங்கியுள்ள அகதிக்குடும்பங்களைச் சந்தித்தார். அகதிக் குடும்பங்களின் தேவைகள், குறைகளை அமைச்சருக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திருமலைக் கிளைத் தலைவர் டாக்டர். ஞானகுணாளன் விவரித்தார். திருமலை மாவட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஹீசெய்ன்டீன் அமைச்சருடன் சென்றிருந்தார். அமைச்சருடன் சிங்கப்பூர் பத்திரிகையாளர் குழு ஒன்றும் வந்திருந்தது. (25)

## நோர்வே செஞ்சிலுவை வைத்திய சாலை ஈச்சிலம்பற்றில் இயங்க ஆரம்பித்தது

திருமலை மாவட்டம்-விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஈச்சிலம்பற்றுக் கிராமத்தில் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் அமைத்த தற்காலிக வைத்திய சாலை நேற்று முன்தி னம செவ்வாய்க் கிழமை தொடக்கம் இயங்க ஆரப்பித்துள்ளது. 20 பேர் கொண்ட நோர்வே வைத்தியர் குழு வைத்தியசாலையை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடத்த விருப்பதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் திருமலை மாவட்டக்கிளையின் தலைவர் டாக்டா. ஞானகுணாளன் தெரிவித்தார். சத்திரசிகிச்சைக்கூடமும் இவ் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. சத்திர சிகிச்சை நிபுணர், மகப்பேற்று நிபுணர், குழந்தை நல நிபுணர் முதலியோர் அங்கு பணிபுரிகின்றனர். (25)

## இலங்கையின் 10 வீத வெளிநாட்டுக்கடனை பிரிட்டிஷ் அரசாங்கம் செலுத்தும்

(கொழும்பு)

இலங்கை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய அனைத்துத் தரப்புக் கடன்களில் பத்து வீதத்தை மீளச் செலுத்த பிரித்தானிய அரசாங்கம் முன்வந்துள்ளது. அதேவேளை சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கு வழங்கவுள்ள 75 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நிதி உதவியில் பெருமளவிலான தொகை இலங்கைக்குக் கிடைக்கு மெனவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸ்ரீபன் ஹெவன்ஸ் கூறியுளளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியளாலர் மாநாட்டிலேயே ஸ்ரீபன் ஹெவன்ஸ் இவ்வாறு கூறினார்

அவர் அங்கு இவ் விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில், இலங்கை சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களில் ஒரு பகுதியைச் செலுத்த நாம் முன்வந்துள்ளோம்.

ஆசிய வலயத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு பிரித்தனிய அரசாங்கம் இதுவரை வழங்கி உள்ள நிதி 75 மில்லியன் ஸ்ரேலிங்பவுண் ஆகும். இதற்கு மேலதிகமாக இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெல்ஜியம் இராணுவக்குழு நேற்று கொழும்பு வந்தடைந்தது

பெல்ஜியம் நாட்டு இராணுவத்தைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான நிவாரண சேவையாளர்கள் கொண்ட குழுவொன்று நேற்று கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளது.

இக்குழுவில் பெண்களும் அடங்குகின்றனர். அவர்கள் நிவாரண சேவைக்குத் தேவையான பல பொருட்களைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரியவருகிறது. அத்துடன் கனடாவைச் சேர்ந்த நிவாரண சேவைக் குழுவொன்றும் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளது.

### - பேரலை அனர்த்தத்தின் போது -
## அடையாளஅட்டை இழந்தோருக்கு புதியவை வழங்க நடவடிக்கை

சுனாமி பேரலையினால் ஒன்றரை இலட்சம் பேரின் தேசிய அடையாள அட்டைகள் காணாமற் போயுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. இவர்களுக்கு இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு துரித நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது தெரிவிக்கின்றது. அடையாள அட்டை விநியோகம் தொடர்பான ஆவணங்கள் இவர்களிடம் இல்லாத போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### இன்று கையளிக்கும்

மீண்டும் இலங்கையைக் கட்டியெழுப்பவெனக் கூறி சனாதிபதியினால் அமைக்கப்பட்ட செயலணி இன்று தனது திட்டத்தை சனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது. இதனை சனாதிபதிச் செயலகம் அறிவித்துள்ளது. இந்த நிலையில்இதனை உறுதிப்படுத்திய பின்னர் சனாதிபதி எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளார் (32)

## நிவாரணக் கொடுப்பனவு தொடர்பில் அரசிடம் உரிய வேலைத்திட்டமில்லை
### ஐ.தே.க.பா.உ ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் நிவாரணக்கொடுப்பனவு தொடர்பாக உரிய வேலைத்திட்டம்இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், சனாதிபதியினால் நிவாரணக்கொடுப்பனவுகளுக்காகவும் அதற்கான பணிகளுக்காகவும் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் ஒரு போதும் சாதாரண மக்களின் துன்பங்களை அறியாதவர்களாவர். கல்வி அமைச்சின் செயலர் தாரா டிமெல்,சனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவல, போன்றவர்கள் பேருந்தில் கூட ஒரு போதும் செல்லாதவர்கள். இவர்கள் கொழும்பில் இருந்துக்கொண்டு தீட்டும் திட்டங்கள் யாவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத திட்டங்களாகும்.

பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அறிந்து அதன்படி செயற்பட்டால் மாத்திரமே நிவாரணப் பணி களையும் மீள்கட்டு மாணத்தையும் உரியவகையில் மேற்கொள்ள முடியும். எனவே முதலில் பாதிக்கப்பட்ட தனிநபர்களின் நலன்கள் கவனிக்கப்பட்ட பின்னரே நகர அமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார். தற்சமயம் வரும் உடனடி நிவாரணங்கள் விரைவில் நின்று விடும் என்றும் அவர் குறிப்பிட்டார் (32)

# கனேடியப் பிரதமர் முல்லை செல்லவேண்டும்

# கனடா வாழ் தமிழ் மக்கள் வலியுறுத்து

கனேடியப்பிரதமர் போல்மாட்டின் சுனாமி கடல் அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுக்குச் சென்று பார்வையிட வேண்டுமென கனடாவில் வாழும் தமிழ் மக்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்படுகிறது. சுனாமி அனர்த்தத்தால் கூடுதல் பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு உட்படதமிழர் பகுதிகளைப் பார்வையிடவேண்டும் என அம்மா வலியுறுத்தி வருகின்றனர். (32)

- மட்டு. களுவத்துங்கேணி -

## சட்டவிரோதமாக தங்க வைக்கப்பட்டிருந்த சிறுவர், சிறுமியர்கள் மீட்பு

மட்டக்களப்பு களுவத்தங்கேணியில் மதபோதகர் ஒருவரின் வீட்டில் சட்ட விரோதமான முறையில் தங்கவைக்கப்பட்டிருந்த மூன்று சிறுவர்களும், நான்கு சிறுமிகளும் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அதிகாரியின் உதவியுடன் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சிறார்கள் ஏழு வயதிற்கும், 12 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.இந்தச் சிறுவர்களைக் கடந்த சனிக்கிழமை குறிப்பிட்ட மதபோதகர் தனது வீட்டுக்குக் கொண்டு சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

## முல்லை-நெடுங்கேணி வீதி இன்று மூடப்பட்டிருக்கும்

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான நெடுங்கேணிக்கு சமீபமாகவுள்ள பாலத்தை சீர் செய்வதற்காக முல்லைத்தீவு-நெடுங்கேணி நெடுஞ்சாலையை இன்று வாகனப் போக்குவரத்திற்கு தடை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்று வழியாக முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் நெடுங்கேணி ஊடாக வாகனங்கள் பயணிக்குமாறு இத்தால் வேண்டப்படுகிறது. இதனால் சகலருக்கும் ஏற்படும் அசௌகரியங்களுக்கும், இடைஞ்சல்களுக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## யாழ்.இல்...

செல்லவிடாது சிறிலங்காப் பொலிசார் அடாவடித்தனத்தில் இறங்கினார்கள். இதனைத் தொடர்ந்து முதலாம் கட்டைப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவத்தை அறிந்த வட இந்து மகளிர் கல்லூரி நலன்புரி நிலைய வாழ்மக்கள் பொலிசாரோடு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளதனைத் தொடர்ந்து நிலைமை மோசமடைய பொலிசார் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை உறுப்பினரை மேற்கொண்டு செல்ல அனுமதித்தனர்.

மேற்படி போராளி நலன்புரி நிலைய மக்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கா)

## த.பு.க...

துள்ளனர்.பின்னர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் தங்கிருந்த வீட்டின் உரிமையாளரை அழைத்து அவர்களுக்கு வீடுகொடுக்க வேண்டாம் என எச்சரித்துள்ளனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் கோமாரிப் பிரதேச நலன்புரி நிலையங்களைப் பார்வையிடச் சென்றபோது தாண்டியடிப் பாடசாலை நலன்புரி நிலையத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் உலருணவுப்பொருட்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தவேளை அங்கு வந்த சிறப்பு அதிரடிப்படை அதிகாரி தாண்டியடிப்பிரதேசம் எமது கட்டுப்பாட்டுப்பிரதேசம். நாம் சொல்கின்றமைக்கு அமைய நீங்கள் செயற்பட வேண்டுமெனக்கூறியதுடன்புனர்வாழ்வுக் கழகத்தினரால் உலருணவு வழங்க விரும்பினால் காலையில் கொடுத்துவிட்டு உடனேயே வெளியே செல்ல வேண்டுமென எச்சரித்துள்ளனர். அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக பதாகை, மற்றும் அலுவலக பதாகை என்பவற்றை பாவிக்கக் கூடாதெனவும் இக்கழக உடைகளை அணியக் கூடாதெனவும் கூறியுள்ளனர். மேலும் பாதிக்கப்பட்டவர்களது குடும்பத் தரவுகளை நீங்கள் திரட்டக் கூடாது . நாங்கள் தருவோம். அல்லது கிராமசேவகர் ஊடாகத்தான் தரவுகள் சேகரிக்க முடியுமெனக் கூறியுள்ளனர்.

அதற்கு பணியாளர்கள் தாம் ஓர் அரசசார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் என்பதனைத் தெளிவாக விளக்கியபோதிலும் அதிரடிப்படையினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனிடையே நேற்றுமாலை 4.00 மணிக்குள் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அனைத்து நலன்புரி நிலையங்களிலும் கடமையாற்றுகின்ற புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் தங்களது கடமைகளை நிறுத்திவிட்டு வெளியேற வேண்டுமென திருக்கோவில் அதிரடிப்படையினர் கட்டளை பிறப்பித்துள்ளனர். திருக்கோவில் பிரதேச சமாதிப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் உணவுப் பொருட்களை வழங்கிக்கொண்டிருந்த வேளை அதிரடிப்படையினர் சென்று நேற்றுக்காலை 6.00 மணி முதல் இந்நிறுவன பதாகை, அலுவலகப் பதாகை என்பவற்றை கழட்டிவிட வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களால் பலவந்தமாக அனுப்பப்படுவரெனக் கூறியுள்ளனர். உலர் உணவுப் பொருட்களைக் கொடுக்க விரும்பினால் கொண்டுவந்து முகாமிலுள்ள கிராம சேவகர் ஊடாகக் கொடுத்துவிட்டு உடனே வெளியேற வேண்டுமென மிரட்டியுள்ளனர். சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் இத்தகைய அடாவடித்தனச் செயலால் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணியினை மேற்கொள்வதில் புனர்வாழ்வுக் கழகம் பலத்த சவால்களை எதிர்கொண்டுள்ளதாகவும், எந்த நிலையிலும் மக்களுக்கான பணியினை இந்நிறுவனம் வழமை போலவே மேற்கொள்ளுமென மாவட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## இயற்கை....

கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்விற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.எனவும் தெரிவித்தார். வெளியுலகிற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றத்தைக் காட்ட அரியவாய்ப்பு, யுத்தநிறுத்தம் சமாதானம் புலிகளின் வினைத்திறனை வெளிப்படுத்தும் அரிய சந்தர்ப்பம் என நீங்கள் கருதுகின்றீர்களா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அரசியல் துறைப்பொறுப்பாளர்.விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் தங்கள் மண்ணில் ஒரு அரசியல் இலட்சியத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக போராடி வருகிறார்கள். எங்கள் மண்ணை ஆயிரக் கணக்கான இராணுவம் வந்து ஆக்கிரமிக்கும்போது, குண்டு வீச்சுக்களைச் சந்திக்கும்போது, தமது உறவுகளை கண் முன்னால் பறி கொடுக்கின்றபோது அவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற உணர்வுகளால், போராட வேண்டும் என்ற உந்துதலால் தேசத்தைக் காக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காகத் தான் சில தாக்குதல்களை செய்தார்களே தவிர, அவை பயங்கரவாதத் தாக்குதல்கள் அல்ல. தற்காப்புக்காக எடுக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் உலக அளவில் சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளுடன் இணைத்து காரணம் காட்ட புலிகள் மீது தவறான பார்வை வீழ்ந்தது. புலிகள் எந்த நாட்டு மக்களுக்கோ சர்வதேச நாடுகளுக்கோ அச்சுறுத்தலை ஏற்படுத்துவதையோ நெருக்கடிகளை ஏற்படுத்துவதையோ நோக்கமாகக் கொண்டு செயற்படவில்லை. இது தவறாகப் பிரசாரம் செய்யப்பட்டது. உண்மை எதுவெனில் யதார்த்தத்துக்கு உட்பட்டது. எனவே நாங்கள் எமது தாயகப் பிரதேசத்தில் உரிமைக்காகப் போராடுகின்றோம் மக்களின் மத்தியில் பெரும் அழிவை ஏற்படுத்தும் அரச படைகளுக்கு எதிராக சுதந்திரத்துக்காகப் போராடுகிறோம். எங்கள் மக்களையும் மண்ணையும் காப்பாற்றவே போராடுகிறோம்.

முன்பு இங்கு பத்திரிகையாளர் வரத் தடை; அரசுகளின் பிரதிநிதிகள் வரத் தடை; பொருளாதாரத் தடை; என்பவற்றை சிறிலங்கா அரசு எம்மீது திணித்து இப்படியான பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்தது. அதனால் தான் இப்படியான தவறான பார்வை எம்மீது ஏற்பட்டது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள்தானா? என்ற கேள்விக்கும் பதிலளிக்கையில்

ஏற்கனவே தமிழ் மக்கள் ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டுள்ளனர். இராணுவ ஒடுக்கு முறைகளுக்குள் சிக்குப்பட்டுள்ளனர். சுதந்திரத்திற்காகப் போராடி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ் மக்கள் ஒரு அரசியல் இலட்சியத்தை வைத்துக் கொண்டுள்ளார்கள். அதற்கு உட்பட்டுள்ளவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் உள்வாங்கிக் கொண்டுள்ளார்கள். தமிழ்க் கூட்டமைப்பு எனப்படும் நான்கு கட்சிகள் இதனடிப்படையில் இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முழு ஆதரவுடன் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் தமிழ்க் கூட்டமைப்பை தெரிவு செய்தனர். இந்த வகையில் உரிமை கோரி அடக்கு முறையில் இருந்து மீள வேண்டும் என்று இருக்கின்ற மக்களுக்கு தங்களுடைய கொள்கையினைச் சுமக்கின்ற அமைப்பினரைத்தான் தெரிவு செய்வார்கள் என்றார்.

# 'ரிப்பர்' மோதியதில் ஐஸ்பழ வியாபாரி பலி

புதுக்குடியிருப்பில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; நேற்றுப் பி.ப 2.30 மணியளவில் தேவிபுரம் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த ஐஸ்பழ வியாபாரி மீது அதே வழியில் பின்புறமாக வந்து கொண்டிருந்த "டிப்பர் "வண்டி மோதியதில் கோயில் திட்டம், வல்லிபுனத்தைச் சேர்ந்த 34 வயதுடைய கண்ணியப்பன் மகேந்திரம் என்பவர் படுகாயம் அடைந்தார். அவர் அங்கிருந்து அவசர அவசரமாக புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும்போது பரந்தன் பகுதியில் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தை அடுத்து புதுக்குடியிருப்பு காவல்துறையினர் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (08)

## இல.ஒலி...

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்தி வெளியிட்டிருந்தமையை இணையத்தளம் ஒன்று சுட்டிக்காட்டுகிறது.

## யாழ்.இல்.சுனாமி..

சென்றிருந்த அவர் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியினைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்புத் தொடர்பாக ஊடகவியலாளர்களிடையே பின்னர் விபரித்த இளம்பரிதி "சுனாமி கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் தொடர்பாக அவர் கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவித்தார்." அத்துடன் சர்வதேச சமூகத்தினால் வழங்கப்படும் உதவிகள் தமிழ் மக்களுக்கு கிட்டுகின்றதா? இல்லையா? எனக் கேட்டறிந்து கொண்ட அவரிடம் சர்வதேச நாடுகளது உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள அந்நாடுகள் முயல வேண்டுமெனத் தாம் கோரியிருந்ததாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் பின்னர் வடமராட்சியின் கரையோரக் கிராமங்களான வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடிப் பகுதிகளிற்குச் சென்ற அவர் சேதங்களைப் பார்வையிட்டதுடன், நலன்புரி நிலயங்களிற்கும் நேரில் விஜயம் செய்து அங்கு தங்கியுள்ள மக்களையும் சந்தித்து உரையாடியிருந்தார்.

பின்னர் நேற்றிரவு வடமராட்சியின் நெல்லியடிப் பகுதியினில் இயங்கிவரும் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோரிற்கான விசேட புனர்வாழ்வு செயலணிக் குழுவின் அலுவலகத்திற்கு நேரில் அவர் விஜயம் செய்திருந்தார். யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதி நிதிகளெனப் பலரும் அவருடன் சந்தித்து உரையாடியிருந்தனர்.

குறிப்பாக "இலங்கைக்கு வருகை தரவுள்ள கனேடியப் பிரதமர் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களிற்கு நேரில் விஜயம் செய்ய வேண்டுமெனும் அழைப்பினை" இப்பிரதிநிதிகள் கனேடிய பாராளுமன்ற உறுப்பினரிடம் முன் வைத்திருந்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது பெரும் மன ஆறுதலைத்தருமெனவும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரிடையே வலியுறுத்தியிருந்தனர்.

இதேவேளை இன்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு செல்லும் அவர் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையிலான பல்கலைக்கழக சமூகத்தைச் சந்திக்கவுள்ளார். அதைத் தொடர்ந்து யாழ்.பொது நூலகத்தில் கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களது உறவினர்களைச் சந்திக்கும் அவர் பின்னர் யாழ்.செயலகத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

பின்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளுக்கும் செல்லும் அவர் அங்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது. (27,கா)

## பாதிக்கப்பட்ட...

போது, நேற்றுத்தான் (புதன்கிழமை) நிவாரணம் பெறுவதற்கான் விண்ணப்பங்கள் அரசினால் தங்களிற்கு விநியோகிக்கப்பட்டதாகக் காட்டினார்கள்.

அனர்த்தம் நடந்து 18 நாட்களாகியும் தங்களிற்கு அரசால் எந்தவித உதவியும் வழங்கப்படவில்லையென்பதையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி மட்டுமே தங்களிற்கு இருப்பதையும் அவர்கள் ஆதங்கத்துடன் தெரியப்படுத்தினர். இதன் பிறகு அங்கிருந்த தொண்டர்கள் மற்றும் அப்பிரதேசப் பிரமுகர்கள் ஆகியோருடன் பாராளுமன்ற உறுப்பினர் கதைத்தபோது அவர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மாத்திரமே அப்பகுதியில் சேவை புரிவதை உறுதிப்படுத்தினர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்குச் சென்ற கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர், அங்கு மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் பணிகளில் தாமே ஈடுபட்டிருப்பதைக் கண்ணுற்று, எவ்வாறு நீங்கள் இவ்வளவு சீக்கிரம் எந்தவித உதவியுமில்லாமல் இயல்பு நிலைக்குத் திரும்ப முயற்சிக்கிறீர்கள் எனக் கேட்டபோது, 20 வருடங்களிற்கு மேலான போரில் நாம் இழப்புக்களைச் சந்தித்த போதெல்லாம் இவ்வாறே மீண்டு வந்தோம். இது எமக்குப் புதிதான தொன்றல்ல எனத் தெரிவித்த அவர்கள், தங்களது வள்ளங்களைத் திருத்தும் பணியிலும், இடிந்த வீடுகளைத் திருத்த முனைவதையும் தான் பாராட்டுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இராணுவக் காவலரண்களும் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டதால், தற்போது தங்களது வீட்டுத் தளபாடங்களை எடுத்து இராணுவத்தினர் காவலரண்களைக் கட்டுவதாக ஒரு குடும்பஸ்தர் மேற்படி பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டதோடு, தாங்கள் அவற்றைக் கேட்டபோது இராணுவம் தங்களைத் தாக்கியதாகவும் தெரிவித்தார். அரசின் உதவி கிடைக்கவில்லையென்றாலும் பரவாயில்லை எங்களது பொருட்களையாவது மீட்டுத் தாருங்கள் என்று மேற்படி குடும்பஸ்தர் பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டார்.

அதனைத் தான் பார்க்க விரும்புவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தபோது, தங்களது வீட்டுத் தளபாடங்களைக் கொண்டு திருத்தப்பட்ட இராணுவக் காவலரணை பாராளுமன்ற உறுப்பினருக்கு மேற்படி குடும்பஸ்தர் காட்டினார். அக் காவலரணைப் பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மேற்படி குடும்பஸ்தினருக்கு தனது கவலையைத் தெரிவித்தார். இச் சம்பவத்தை அங்கு காவலில் நின்ற இராணுவத்தினரும் பார்த்து நின்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது